இதழ் 2 | மலர் 64 | பிப்ரவரி, 2021 | Rs.20/-

அரும்பு

இளைய தலைமுறை இதழ்



வாழ்வை மேம்படுத்தும் அன்புக் கருணைக்கான தியானம்!

வங்கிசார் மோசடிகள்: தப்பிக்கும் வழிகள்!

கேள்விக்குறியாகும் இந்திய விவசாயம்!

அரும்பு

இளைய தலைமுறை இதழ்

ADVERTISEMENT TARIFF

PAYMENT MODE

M.O/DD/CHEQUE/BANK TRANSFER
IN FAVOUR OF ARUMBU

NAME	: ARUMBU
AC/NO	: 0138053000012794
IFSC	: SIBL0000138
BANK	: THE SOUTH INDIAN BANK
BRANCH	: KELLYS, CHENNAI 10.

SPECIFICATIONS

Full Page Size	: Width 195 X 260 mm
Half Page	: 195 mm X 129 mm
Back Cover Size	: 195 mm X 215 mm
Bleed	: 2 mm

DESIGN

We Accept Advertisments Designed By You
We Also Design For You FREE of Cost

SPACE	TARIFF	PAPER
WRAPPER (BACK OUTER)	12,000	ART
WRAPPER (FRONT INNER)	12,000	ART
WRAPPER (BACK INNER)	11,000	ART
INNER FULL PAGE	8,000	-
HALF PAGE	4,000	-
QUARTER PAGES	2,000	-

புதிர் விடைகள்



1.ஒவ்வொரு 9 கட்டங்களிலும் (3X3) ஒவ்வொரு வடிவத்திலிருந்து ஒரு ஜோடியும் ஒரு காலி கட்டமும் இடம் பெறும். அதனடிப்படையில்...

2. புதிர் பாதையின் வழி இதோ...



அரும்பு

இளைய தலைமுறை இதழ்

இதழ் 2 | மலர் 64 | பிப்ரவரி, 2021

ஆசிரியர்
ஆ.அமிர்தராஜ்

துணை ஆசிரியர்
ஜெயராணி

நிர்வாகக் குழு
அருள் திரு முனைவர் கே.எம். ஜோஸ், ச.ச.
அருள் திரு முனைவர் லூர்துசாமி போஸ்கோ, ச.ச.
அருள் திரு முனைவர் எட்வின் வசந்தன்

பதிப்பாசிரியர்
ஆ.அமிர்தராஜ்

ஆசிரியர் குழு
சுரேஷ் பால்,
தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி.
பத்மா அலிஸ்டர்
அமலன் ஸ்டேன்லி
சுஜாதா நடராஜன்
ப்ரதிபா ஜெயசந்திரன்

வடிவமைப்பு
M CREATIVE

சந்தா மேற்பார்வையாளர் / அஞ்சல்
வெ. ஆரோக்கிய செல்வி

நிதி/கணினி மேலாண்மை
ஜான்சி அலெக்ஸ்

விற்பனை மேலாளர்
ரா. ஜான் போஸ்கோ

சந்தா விபரம்

தனி இதழ்	ரூ. 20
ஆண்டுச் சந்தா	ரூ. 220
2 ஆண்டுகள்	ரூ. 440

விளம்பரக் கட்டணம்

முழுப்பக்கம்	ரூ. 8,000
அரைப்பக்கம்	ரூ. 4,000
கால்பக்கம்	ரூ. 2,000
பின் அட்டை	ரூ. 12,000
உள் அட்டை	ரூ. 12,000

வெளியீடு முகவரி:
அரும்பு
26/17, இரங்கநாதன் அவென்யூ,
சில்வன் லாட்ஜ் காலனி, கெல்லிஸ், சென்னை - 600 010.
044 - 26612138/40, 9444799942
arumbu4young@gmail.com
www.arumbupublications.in

அரும்பு இதழில் வெளியாகும் படைப்புகளை எடுத்தாளவோ மறுபதிப்புச் செய்யவோ ஆசிரியரின் எழுத்துப்பூர்வமான அனுமதியைப் பெற வேண்டும்.

உள்ளே...

10 விளையாட்டை பள்ளிகள் ஆதரிக்க வேண்டும்

22 வங்கிசார் மோசடிகள்: தப்பிக்கும் வழிகள்!

23 ஜொஹனஸ் கெப்ளர் விஞ்ஞானிகளின் கதை

26 உனது பையில் ஒரு கூழாங்கல்

34 அரசுப் பள்ளிகளை மேம்படுத்துவதே என் லட்சியம் – நடிகை பிரணிதா

Printed and Published by A. Amirtharaj, on behalf of Salesian Publishing Society, No. 45, Landons Road, Kilpauk, Chennai-600 010.

Printed at Salesian Institute of Graphic Arts (SIGA), No. 49, Taylors Road, Kilpauk, Chennai - 600 010. Editor: A. Amirtharaj.

மனநலத்திற்கான மருந்தாகும் எழுத்து!

புத்தாண்டு தினத்தையொட்டி நான்கு வார்த்தைகளில் நலம் விசாரித்து, சுருக்கமாக வாழ்த்து கூறிவிட்டு திரும்பும் நோக்கத்தோடு நெருங்கிய நண்பர் ஒருவரை சந்தித்தேன்.

அவரோடு நெடுங்கால உறவும் கூட. அந்நகர அரசு தலைமை மருத்துவமனையில் பலரும் தேடிவரும் சில தரமான மருத்துவ நிபுணர்களில் இன்று அவரும் ஒருவர் என உறுதியாக கூற முடியும். சமீபத்தில் கொரோனா தொற்றின் வேகம் கணிசமாக குறைந்துவிட்டதாக ஊடகங்கள் தரும் அன்றாட செய்தியை நான் அவரிடம் உற்சாகத்துடன் குறிப்பிட நேர்ந்தது.

அவரோ ‘இதையெல்லாம் அப்படியே எடுத்துக்கொள்ளாதீர்கள். தேவையானால் கூட்டிச் சொல்வதும், பிறகு குறைத்து சொல்வதும் இன்றைய போக்கு. நீங்கள் எப்போதும் போல் இந்த அபாயகரமான தொற்று குறித்து மிகவும் கவனமாக இருங்கள்” என ஆழ்ந்த ஆதங்கத்துடன் அறிவுறுத்தினார். தடுப்பூசி வந்த பிறகும் கூட நெடுங்காலம் தற்போதைய எச்சரிக்கையுணர்வோடு நடமாடினாலே இத்தொற்றிலிருந்து விலகியிருக்க முடியும் என்றும் அறிவுறுத்தினார். உண்மையாகவே தொற்றில் தளர்வு என்பதால் ஊரடங்கில் தளர்வா? தவிர்க்க முடியாத புறக்காரணங்களான சமூக பொருளாதார நெருக்கடிகளால், தொற்று பற்றிய தினசரி கணக்கீட்டில் திடீர் தளர்வா?

இத்தகைய கேள்விகளை பின்நேர தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின் உயிர்நாடியான கூச்சல் ஆய்வரங்கங்களின் அலசலுக்கு அர்ப்பணித்து விடலாம் என்றே தோன்றுகிறது. இப்படியெல்லாம் நழுவிடாமல் உடனே நாமெல்லோரும் கவனத்தில் இருத்த வேண்டிய வேறொரு கேள்வியொன்று உள்ளது. அது வெறும் ஊரடங்கு தளர்வை பற்றியது மட்டுமல்ல, முடிவுறும் ஊரடங்குகளையும் தாண்டி நம்மிலே தொடரவல்ல கோவிட்-19-ன் இப்பின்விளைவுகளைப் பற்றியது: மனோரீதியான அகத்தளர்வு மற்றும் மானசீகமான மானிட உறவுகளினிடையே இந்த இடைக்காலத்தில் நுழைந்துவிட்ட தொய்வும், தேக்கமும். இவற்றை பற்றி ஆழந்து யோசிக்க வேண்டும். தற்காலிகமாக இப்போது பேணப்படுகின்ற சமூக இடைவெளி, ஒரு தீர்வற்ற தன்னல இடைவெளியாக இறுக்கமுற்று நம்மிடையே நிரந்தரமாகி குடியேறி விடக்கூடிய அபாயம் வெகு தொலைவில் இல்லை.

ஆரம்ப கட்ட ஊரடங்கு காலத்திலேயே பல்வேறு பொருளாதார நெருக்கடிகளோடு சேர்ந்து, எண்ணற்ற குடும்பங்களில் பலருக்கும் மன அழுத்தமும் கூடியது. வீட்டுக்கு வீடு என்றில்லாவிட்டாலும், பல குடும்பங்களுக்குள்ளே பெண்களுக்கு எதிரான வன்முறையும் அதிகரித்தது. இவை பற்றிய விரிவான விவாதம் பொது ஊடகங்களில் தொடர்ந்து இடம்பெறுவதில்லை. அவற்றால் தொட்டும், தொடாமலும் விடப்படும், மிக விரைவில் மறக்கப்பட்டு விடும் வேண்டாத விஷயங்களாகவே இப்பிரச்சினைகள் இன்றும் தொடர்கின்றன.

இப்பின்னணியில் தான் நல்ல இலக்கியம், குறிப்பாக சிறந்த கவிதைகள், பொது ஊடகங்களின் வழக்கமான மறதியிலிருந்து நம்மை மீண்டெடுத்து மானிட இருத்தல் குறித்த பல ஆழ்ந்த கவலைகளை நம் மனக்கண் முன் தொடர்ந்து நிலைநிறுத்துகின்றன.

இவ்விதழில் இடம்பெறும், ‘தன்னந்தனிமை’ என்கிற மராத்திய மொழி கவிதை இதற்கொரு உதாரணம். ஊரடங்கு கால இறுக்கத்தை ஒத்த ஒருவித அழுத்தத்திற்கு ஆளாகி, தமது சொந்த வீட்டிற்குள்ளேயே ஒவ்வொருவரும் மற்றவர்களிடமிருந்து தம்மை தனிமைப்படுத்திக் கொண்டு, அவரவர் மூலையில் உறைந்து போயும் ஒடுங்கியும் நிற்பதை இக்கவிதை மிக தந்திரமாக சொல்கிறது. ஒவ்வொரு மனிதரிலும் நலமானதொரு மனமாற்றத்தை நயமாகக்கோரி, அதேவேளை சுறுக்கென ஊசிபோல் பாய்ந்திறங்கி உள்ளுணர்வில் ‘நாம் இனி நலமுற வேண்டும்’ என்கிற நல்லதிர்வை ஒரு சிறந்த கவிதை எப்படி சாதிக்கலாம் என்பதற்கு இக்கவிதை ஒரு முன்மாதிரி.

ஒரு கவிதையிலே எப்படி மானிட அவஸ்தைகளை, அதுவும் அங்கதம் கலந்த ‘மிகைப்படுத்தல்’ என்கிற ஓர் இலக்கிய உத்தியை மாத்திரமே கவிதை முழுக்கவும் கையாண்டு, மிக எளிய பாணியில் அனைத்தையும் சொல்லாமல் சொல்லிவிடலாம், புலம்பாமல் சொல்லிவிடலாம்; எப்படி நமது அன்றாட சுயநலப் போக்கை, அதன் நிமித்தம் அந்நியப்பட்டு போய் நிற்கும் நம் மானிட இருப்பை எள்ளாமல் எள்ளி அதனை எளிதில் கேள்விக்குட்படுத்திவிடலாம் என்பதற்கு இக்கவிதை நல்லதொரு எடுத்துக்காட்டு.

உடற் பிணிகளுக்கு மருத்துவர்களின் தடுப்பூசிகளால் பேருதவி என்றால் சமூகப் பிணிகளுக்கு உரக்க பேசாத உயர் இலக்கியமும் நல்மருந்து. ‘தன்னந்தனிமை’ என்கிற இக்கவிதையும் ஒருவித தடுப்பூசிதான். வீட்டிலும், நாட்டிலும் மானிட உறவுகள் மீண்டும் நலமடைய வேண்டும் என்பதற்கான ஊசி மருந்தை தந்திரமாகவும் லாவகமாகவும், இக்கவிதையை பலமுறை வாசித்து, அசைபோடும் எந்தவொரு வாசகரின் உள்ளுணர்வினுள் பாய்ச்சவல்ல ஒரு தடுப்பூசி இது.

அன்புடன்

ஆ. அமிர்தராஜ்

ஆ.அமிர்தராஜ்
ஆசிரியர்

இந்தியாவில் காடுகள் அழிப்பு!

மனித ஊடுருவலுக்காக அழிக்கப்பட்ட காட்டு நிலங்கள்! [சதுர கி.மீ]



எதற்காகக் காட்டு நிலங்கள் அதிகம் அழிக்கப்படுகின்றன!

சாலைகள், மின்சார இணைப்பு, ரயில் பாதை அமைக்க, குழாய்கள் அமைத்தல்
53.66%

சுரங்கம் அமைக்க
27.4%

நீர்ப்பாசனத் திட்டத்திற்கு
14.3%

நீர்மின் நிலையம்
0.84%

கனிமத் தாதுகள் எடுக்க
0.24%

அனல்மின் நிலையம்
0.64%

மற்றவை
2.92%

தொகுப்பு: ஆரோன்

Source: Rajya sabha, Analysis of forest Diversion in india, 2019.

2019-ல் மனித ஊடுருவலுக்காகக் காட்டு நிலங்களை அதிகம் அழித்த டாப் 5 மாநிலங்கள்! [ஹெக்டேர்]





இந்தியாவில் 2015 முதல் 2019 ஜூன் வரை வெட்டுவதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட மரங்களின் எண்ணிக்கை

94,98,516



கேள்விக் குறியாகும் இந்திய விவசாயம்!

சுரேஷ் பால்

இந்தியா தொழிற்துறையில் மிகவும் வளர்ந்து வந்தபோதிலும் இன்றும் 57 சதவீத மக்கள் விவசாயம் சார்ந்த தொழில்களில்தான் ஈடுபட்டு வருகிறார்கள். இவ்வாறு பலகோடி மக்கள் ஈடுபட்டு வரும் தொழிலாக விவசாயம் இருக்கிறது. ஆனால், அது லாபகரமான ஒன்றாக இல்லை. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் விவசாயத்தின் பங்கு வெறும் 16 சதவீதமே உள்ளது. இதுவே ஆண்டுதோறும் பல்லாயிரக் கணக்கான விவசாயிகளை தற்கொலைக்குத் தூண்டுகிறது. அண்மையில் நடத்தப்பட்ட ஒரு ஆய்வின்படி 76 சதவீத விவசாயிகள் அத்தொழிலை விட்டு சென்று விடவே விருப்பம் தெரிவித்துள்ளனர்.

மிகப் பெரிய நிலப்பரப்பு நீர் ஆதாரங்கள் போன்றவை இருப்பினும் இந்திய விவசாயம் இவ்வாறு சீரழிந்த நிலையில் இருப்பதற்கு மிகவும் அடிப்படையான காரணம் அரசின் தவறான திட்டங்களும் நிர்வாகமுமே! நில உரிமை அமைப்பு இன்னொரு காரணம். இங்கு நிலமற்ற கூலி விவசாயிகளின் எண்ணிக்கையே அதிகம். நிலம் வைத்திருக்கும் விவசாயிகளிலும் 5 ஏக்கருக்கும் குறைவாக நிலமுள்ளவர்கள்தான் அதிகம்.

இந்தியாவில் சராசரியாக ஒரு விவசாயி மூன்று ஏக்கருக்கும் குறைவாகவே வைத்திருக்கிறார். அமெரிக்கா போன்ற நாடுகளில் இது 400 ஏக்கருக்கும் அதிகம். இதனால் ஒரு தனி விவசாயின் இலாபம் என்பது மிகவும் பெரிய தொகையாக இருக்க சாத்தியமில்லை. மேலும், பிற துறைகளோடு ஒப்பிடுகையில் விவசாய உற்பத்தியின் இலாபம் என்பது கணிசமான அளவு அதிகரிக்கவில்லை.

நெஸ்கேப் கோல்ட் காப்பித்தூள் ஒரு கிலோவின் விலை 11,990 ரூபாய் அமேசானில் கழிவு போக இதை 7120 ரூபாய்க்கு வாங்கலாம். ஆனால், காபி பயிரிடும் விவசாயிடம் கொடைக்கானலில் ஒரு கிலோ காப்பிக் கொட்டை வாங்கப்படும் விலை என்ன தெரியுமா? வெறும் 180 ரூபாய். அரிசியை எடுத்துக்கொண்டால் ஒரு குவிண்டால் அரிசி விளைவிக்க ஆகும் தொகை இந்த ஆண்டு 1871 ரூபாய் என கோவை வேளாண் கழகம் கூறியுள்ளது. தமிழக அரசு இந்த அரிசியை கொள்முதல் செய்வதற்கு ரூபாய் 1958 என நிர்ணயித்துள்ளது. அதாவது அரசு விவசாயிடமிருந்து அரிசியை கொள்முதல் செய்தால் ஒரு குவிண்டாலுக்கு ரூ.87 லாபம் கிடைக்கும். ஆனால் அறுவடை செய்த நெல்லை உடனடியாக விற்க முடியாமல் 600 - 700 ரூபாய் குறைவான தனியாரிடம்தான் விவசாயிகள் விற்பனை செய்துள்ளனர். இதற்கு முக்கிய காரணம் அரசு உரிய நேரத்தில் கொள்முதல் செய்யவில்லை. இரண்டாவதாக நெல்லை பாதுகாப்பாக வைத்திருந்து பின்னர் நல்லவிலைக்குவிற்கவிவசாயிகளிடம் சேமிப்பு கிடங்குகள் கிடையாது. மிக முக்கியமாக இந்த ஆண்டு அறுவடை நேரத்தில் பெய்த மழை காரணமாக நெல் அழுகிப் போய்விடக் கூடிய சூழலில் அதனை உடனே விற்றாக வேண்டிய நிலை. இத்தகைய காரணங்களால் விவசாயிகள் பல சமயங்களில் தங்கள் விளைபொருட்களை நஷ்டத்திற்கு விற்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது.

அண்மையில் ஒரு விவசாயி தனது தக்காளிக்கு சரியான விற்பனை விலை கிடைக்கவில்லை என்பதற்காக விளைச்சல் முழுவதையும் சாலையில் கொட்டி அழித்த புகைப்படங்களை ஊடகங்களில் கண்டிருக்கக் கூடும். தான் பாடுபட்டு பல மாதங்களாக உழைத்துப் பயிரிட்டு வந்த விளைச்சலை அடிமாட்டு விலைக்கு கேட்கும்போது வந்த வேதனையின் உச்சம்தான் அந்தச் செயல். நகர்புறங்களில் வாழ்பவர்களுக்கு விவசாயிகளின் நிலை பற்றி ஏதும் தெரியாதவர்களுக்கு இதை ஒரு செய்திப் படமாக வினாடிகளில் கடந்து விட முடியும். ஒரு விவசாயின் வாழ்க்கைத் துயரம் புரிவதில்லை.

எந்த நாட்டிலும் விவசாயம் என்பது உள்ளூர் உணவு தேவைகளை நிறைவேற்றும் ஒன்றாகவே காலம் காலமாக இருந்து வந்துள்ளது.

ஆனால், காலனிய ஆட்சிக் காலத்தில் விவசாயம் என்பது ஆட்சியாளர்களுக்கு லாபம் தரும் தொழிலாக மாற்றியமைப்பட்டது. வியாபாரத்தை மட்டுமே கணக்கில் கொண்ட பணப் பயிர்கள் அறிமுகப் படுத்தப்பட்டு விவசாயிகளுக்கு அறிமுகப்படுத்தப்பட்டு அப்பயிர்களை விளைவிக்குமாறு அவர்கள் கட்டாயப்படுத்தப் பட்டனர். மேல்நாடுகளில் விற்பனை செய்வதற்கான விளைபொருட்கள் இந்தியாவில் பயிரிடப்பட்டன. காப்பி, ரப்பர், பருத்தி, தேயிலை, கரும்பு என இவற்றை அடுக்கிக் கொண்டே போகலாம். உள்ளூர் உணவு உற்பத்திக்கான பயிர்கள் தவிர்க்கப்பட்டு அந்நிலங்களில் பணப்பயிர்கள் விளைவிக்கப்பட்டன.

மேலும் வெளிநாட்டு விவசாய விளைபொருட்களை நாம் வாங்கும் பொருட்டு செயற்கை பஞ்சங்களும் தோற்றுவிக்கப்பட்டன. நம்மை ஆண்ட பிரிட்டிஷ் அரசு தனது லாபத்தை பெருக்கிக்கொள்ள பல்வேறு விவசாயத்துறை மாற்றங்கள் நமது பாரம்பரிய விவசாய முறையை அடியோடு மாற்றியமைத்தது.

சுதந்திரத்திற்குப் பிறகும் இந்தியாவின் உணவு தானிய உற்பத்தி கணிசமாக இல்லை. பற்றாக்குறையே நிலவியது. பற்றாக்குறையைப் போக்க அமெரிக்கா போன்ற நாடுகளிலிருந்து நாம் கோதுமையை இறக்குமதி செய்திருக்கின்றோம். முதல் இரண்டு ஐந்தாண்டு திட்டங்களும் தொழில் வளர்ச்சியையே கவனத்தில் கொண்டது. விவசாயம் சற்று பின்னுக்குத் தள்ளப்பட்டது.

அதன்பின் உணவு உற்பத்தியில் தன்னிறைவு காண திட்டங்கள் தீட்டப்பட்டன. ஆனால் அவையும் தொலைநோக்கு பார்வை கொண்டவையாகவோ இந்திய விவசாயம் மற்றும் விவசாயிகளின் நலனை அடிப்படையாக கொண்டவையாகவோ இல்லை.

எழுபதுகளில் பசுமைப் புரட்சி இந்தியாவில் அறிமுகப்படுத்தப் பட்டது. வீரிய விதைகள் ரசாயன உரங்கள், ரசாயன பூச்சி மருந்துகள் அடிப்படையில் கட்டமைக்கப்பட்ட இந்த புரட்சி இந்தியாவின் உணவு உற்பத்தியை பன்மடங்கு அதிகரித்தது. நாம் உணவு உற்பத்தியில் தன்னிறைவு அடைந்தது மட்டுமின்றி வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்ய முடிந்தது.

ஆனால் பசுமைப் புரட்சி என்பது சரியான விவசாய முறை அல்ல. அந்த முறை விவசாயம் மண்ணுக்கும் சுற்றுச்சூழலுக்கும் அதிக பாதிப்பைக் கொடுக்கக்கூடியது. மேலும் ஆண்டுக்கு ஆண்டு அதிகமான அளவில் உரங்கள், பூச்சிக்கொல்லி களை பயன்படுத்த வேண்டிய தேவை கொண்டது. எனவே, அப்புரட்சியால் நீர்வளம் அதிகம் கொண்ட பஞ்சாப், ஹரியானா போன்ற மாநிலங்கள் அதிக பயன்பெற்றன. அவற்றிலும் அதிக நிலம் கொண்ட பணக்கார விவசாயி களே அதிகம் பயன்பெற்றனர்.

இன்று அந்தப் புரட்சியின் தீய விளைவுகளை நாம் அனுபவித்து வருகின்றோம். நிலைத்து நிற்கும் விவசாய முறைக்கு கொஞ்சம் கொஞ்சமாக மாறி வருகின்றோம். பல இடங்களில் இயற்கை விவசாயம் போன்ற குரல்கள் கேட்பதற்கு இதுதான் காரணம்.

விவசாயத்தை பொறுத்த அளவில் தேவையான நீர், நிலத்திற்கான இடுபொருட்கள் விவசாயிக்கு தடையில்லாமல் கிடைக்க வேண்டும். விளைபொருட்கள் உடனடியாக விவசாயிடமிருந்து சரியான விலை கொடுத்து வாங்கப்பட வேண்டும். நாடு முழுவதும் விளைபொருட்கள் பரவலாக கிடைக்க வழிவகை செய்ய வேண்டும். இந்த விஷயங்களை மனதில் கொண்டு அரசு பல திட்டங்களைத் தீட்டியுள்ளது.

அணைகள் கட்டுதல், நீர் மேலாண்மை மூலமாக விவசாயத்திற்கான நீரை வழங்குதலை அரசு திட்டங்கள் மூலம் செயல்படுத்துதல், ஏழை மக்களுக்கும் உணவுப் பொருட்கள் தடையின்றி கிடைக்க ரேஷன் என்று சொல்லப்படும் பொது விநியோக முறையை உருவாக்கி செயல்படுத்துதல், விவசாயக் கடன், இலவச மின்சாரம், பயிர் காப்பீடு போன்ற திட்டங்கள் மூலம் விவசாயிகளுக்கு அரசு கொடுப்பது. விவசாய விளைபொருட்களுக்கு குறைந்தபட்ச கொள்முதல் விலையை நிர்ணயிப்பது, அந்த விலையில் அரசே நேரடியாக விவசாயிகளி டமிருந்து விவசாய விளை பொருட்களை கொள்முதல் செய்வது, அத்தியாவசிய பொருட்களை வியாபாரிகள் பதுக்கி வைத்து செயற்கை தட்டுப்பாடுகளை தவிர்க்கும் வகையில் சட்டங்களை இயற்றுதல் எனும் பல வழிகளில் விவசாய ஆதரவு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

இவை போதுமானதாக இல்லை. மேலும் முறையாக அமல்படுத்தப் படவும் இல்லை. தொழில்நுட்பம் சார்ந்த வளர்ச்சிப் பாதையில் நாம் பயணிப்பதால் விவசாயமோ விவசாயிகளோ நமது பிரதான கவனமாக இல்லை.

எனவேதான் பட்டினி சாவுகள், தற்கொலைகள், கந்து வட்டி கொடுமைகள், விவசாயிகளின் விளைபொருட்களுக்கு உரிய விலை கிடைக்காமை, இடைத்தரகர்களின் கொடுமை விவசாய உற்பத்தி பிரச்சனைகள் என பல்வேறு சிக்கல்கள் தொடர்ந்து வருகின்றன.

இந்நிலையில் அரசு எம்.எஸ். சுவாமிநாதன் தலைமையில் ஒரு குழுவை அமைத்து விவசாயத் துறையை மேம்படுத்துவதற்கானத் பரிந்துரைகளை ஓர் அறிக்கையாக கேட்டது. அந்தக் குழு விவசாயிகளின் குறைகளைக் கேட்டறிந்து தனது பரிந்துரைகளைக் கொடுத்துள்ளது.

அந்த பரிந்துரைகள் அமல் செய்யப்படும் என விவசாயிகளுக்கு வாக்குறுதி கொடுத்தது மோடி அரசு. ஆனால் வழக்கம் போல அது காற்றில் பறக்க விடப்பட்டது. உதாரணமாக சுவாமிநாதன் குழு பரிந்துரையின்படி உற்பத்தி செலவுடன் 50 சதவீதம் அதிகம் சேர்ந்து அரசு கொள்முதல் விலை நிர்ணயம் செய்யப்பட வேண்டும். இந்த ஆண்டு ஒரு குவிண்டால் நெல்லின் உற்பத்தி செலவு 1871 ரூபாய். பரிந்துரைப்படி கொள்முதல் விலை 2807 ரூபாயாக இருந்திருக்க வேண்டும். ஆனால், மத்திய அரசு நிர்ணயித்துள்ள தொகை வெறும் 1888 ரூபாய் மட்டுமே. தமிழக அரசு 1958 என நிர்ணயித்துள்ளது. கேரளா மட்டுமே ரூபாய் 2750 என நிர்ணயித்துள்ளது. பிற விவசாய பொருட்களுக்கும் கொள்முதல் விலை சுவாமிநாதன் குழு பரிந்துரை அடிப்படையில் நிர்ணயிக்கப் படவில்லை.

நடைமுறையில் அரசால் விவசாய விளைபொருட்கள் அனைத்தையும் கொள்முதல் செய்ய முடியாது. எனவே விவசாயிகள் தனியார் வியாபாரிகளிடம் முன்பணமோ கடனோ பெற்றுதான் தங்கள் விவசாயத்தை நடத்துகின்றனர். தனியார் இந்த குறைந்தபட்ச விலையைக் கூட கொடுத்து வாங்குவதில்லை. இதனால் விவசாயிகள் பெரும் நஷ்டம் அடைகின்றனர்.

புதிய சட்டப்படி விவசாயியும் கார்ப்பரேட் நிறுவனமும் நேரடியாக ஒப்பந்தம் செய்து கொள்ளலாம். அதில் சிக்கல்கள் ஏற்படின் நேரடியாக நீதிமன்றம் செல்ல முடியாது. அரசு இவ்விவகாரங்களில் தலையிடாது.

விவசாயத்தை நெறிப்படுத்தும் சட்ட திட்டங்கள் பரிந்துரைகள் இருக்கும்போதே விவசாயிகளின் நிலை இவ்வளவு மோசமாக உள்ளது. இந்நிலையில்தான் மத்திய அரசு கொண்டு வந்துள்ள மூன்று விவசாய சட்டங்களும் விவசாயிகளுக்கு உள்ள குறைந்தபட்ச உரிமைகளையும் பறித்து விடுவதாக உள்ளது. இதனால்தான் தலைநகர் டெல்லியின் கொடுங்குளிரையும் பொருட் படுத்தாமல் இரண்டு மாதங்களுக்கு மேலாக இலட்சக்கணக்கான விவசாயிகள் இச்சட்டங்களுக்கு எதிராக போராடி வருகின்றனர்.

கடந்த வருடம் செப்டம்பர் மாதம் எந்த விவாதங்களும் இன்றி வெறும் குரல் வாக்கெடுப்பின் மூலம் அவசர அவசரமாக இயற்றப்பட்டன இந்த சட்டங்கள். இந்தியாவின் விவசாயத் துறையையே மாற்றியமைக்கும் அந்த சட்டங்கள் என்னென்ன:

1. விவசாயிகள் (அதிகாரமளித்தல் மற்றும் பாதுகாப்பு) விலை உத்திரவாத ஒப்பந்தம் மற்றும் விவசாய சேவைகள் சட்டம் 2020.

2. விவசாயிகளின் விளை பொருட்கள் வியாபாரம் - வர்த்தகம் (மேம்படுத்துதல் மற்றும் எளிமைப்படுத்துதல்) சட்டம் 2020

3. அத்தியாவசியப் பண்டங்கள் (திருத்தம்) சட்டம் 2020.

படிக்கும்போது விவசாயிகளுக்கு ஆதரவானது போல தோன்றும் இந்த சட்டங்கள் இந்திய விவசாயத்தை பெரும் கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு முழுமையாக திறந்து விடுகின்றன. எப்படியெனப் பார்ப்போம்.

இந்தியாவில் கார்ப்பரேட்கள் விவசாய விளைநிலங்களை வாங்குவதற்கு முன்பு கட்டுப்பாடுகள் இருந்தன. ஆனால், இந்தச் சட்டம் அந்த கட்டுப்பாடுகளை அகற்றியுள்ளது. ஆக, எந்த ஒரு கார்ப்பரேட் நிறுவனமும் எவ்வளவு நிலத்தை வேண்டுமானாலும் வாங்கிக் கொள்ளலாம்.

விவசாய பொருட்களை தனியார் கொள்முதல் செய்வதில் முன்பு கட்டுப்பாடுகள் இருந்தன. குறிப்பாக அத்தியாவசிய பொருட்களை ஒரு அளவுக்கு மேல் வாங்கி சேமித்து வைக்க முடியாது. ஆனால், புதிய சட்டம் அந்தக் கட்டுப்பாடுகளை அகற்றிவிட்டது. எனவே, எந்த கார்ப்பரேட் நிறுவனமும் எந்த விவசாயப் பொருளையும் எவ்வளவு வேண்டுமானாலும் வாங்கி பதுக்கி வைத்துக் கொள்ளலாம்.

மத்திய அரசு மற்றும் மாநில அரசுகள் 22 விவசாயப் பொருட்களுக்கு குறைந்தபட்ச ஆதார விற்பனை விலையை நிர்ணயிக்கின்றன. அதனடிப்படையில் கொள்முதல் செய்கின்றன. இந்தப் புதிய சட்டப்படி இந்த குறைந்தபட்ச கொள்முதல் விலை இருக்காது.

புதிய சட்டப்படி விவசாயியும் கார்ப்பரேட் நிறுவனமும் நேரடியாக ஒப்பந்தம் செய்து கொள்ளலாம். அதில் சிக்கல்கள் ஏற்படின் நேரடியாக நீதிமன்றம் செல்ல முடியாது. அரசு இவ்விவகாரங்களில் தலையிடாது.

இதன் விளைவுகள் என்னவாக இருக்கும் என்பதைப் பார்ப்போம். பெரும்பாலான செழிப்பான விளைநிலங்கள் கார்ப்பரேட்டுகள் வசம் செல்லும். பணப் பயிர்களுக்கு மட்டுமே முன்னுரிமை கொடுக்கப் படும். விதை இடுபொருட்கள்

உபகரணங்கள், உரம், பூச்சிக் கொல்லிகள் எல்லாவற்றையுமே நிறுவனங்களே தந்து அதற்கான விலையை வாங்கும் விலையில் கழித்துக் கொள்வார்கள். எதைப் பயிரிட வேண்டும் என்பதையும் கொள்முதல் விலையையும் கார்ப்பரேட் நிறுவனங்களே தீர்மானிக்கும்.

வழக்குகளை விவசாயிகளே கார்ப்பரேட்டுகளுக்கு எதிராக நடத்திக் கொள்ள வேண்டும். இது நடைமுறை சாத்தியமற்றது என்பது அனைவருக்கும் தெரியும். எனவே, அதற்கு பணிந்து போய்தான் ஆகவேண்டும்.

மிக பிரம்மாண்டமான சேமிப்பு கிடங்குகளை ஏற்கனவே அம்பானி, அதானி குழுமங்கள் அமைத்து விட்டன. கூடவே போக்குவரத்து சாதனங்களையும் தயார் நிலையில் வைத்துள்ளன. எனவே, விவசாய பொருட்களை மிகக் குறைந்த விலைக்கு வாங்கி தங்கள் சேமிப்புக் கிடங்குகளில் பதுக்கி வைத்துக் கொள்வதன் மூலம் செயற்கை தட்டுப்பாடுகளை ஏற்படுத்தி அதிக விலைக்கு விற்க முடியும். உள்ளூர் வியாபாரிகள் இதைச் செய்வதைத் தடுக்கத்தான் அத்தியாவசிய பண்ட சட்டத்தை அரசு 1950களில் கொண்டு வந்தது நினைவிருக்கலாம்.

அரசு கொள்முதலில் இறங்காது எனும்போது அது கார்ப்பரேட் நிறுவனங்களிடமிருந்து அதிக விலை கொடுத்து வாங்கி குறைந்த விலையில் ரேஷன் கடைகளில் விற்க வேண்டும். இதனால் அரசுக்கு பெரும் நிதிச்சுமை ஏற்படும். எனவே படிப்படியாக ரேஷன் கடைகள் இல்லாமல் ஆகிவிடும்.

அதுபோல விவசாயத்தை நேரடியாக கார்ப்பரேட் நிறுவனங்களே மேற்பார்வையிடுவதால் அரசின் ஆதரவுகளான கடன்கள், மானியங்கள், இலவச மின்சாரம், பயிர் காப்பீடு போன்ற பொறுப்புகளிலிருந்து அரசு கழன்று கொள்ளும்.

இந்த மூன்று சட்டங்களும் திரும்பப் பெறப்படாவிட்டால் நாடு சந்திக்கப்போகும் இன்னல்கள் மிகக் கொடூரமானவை. இது பல கோடி விவசாயிகளை மேலும் ஏழ்மைக்குள் தள்ளிவிடும். அல்லது விவசாயத் தொழிலில் இருந்து அப்புறப்படுத்திவிடும். தற்போதுள்ள இந்தியாவின் உணவு தன்னிறைவு என்பது இல்லாமல் போய்விடும். சமூக ரீதியான உணவு பாதுகாப்பு என்பது கேள்விக் குறியாகிவிடும்.

இதனால்தான் இந்தச் சட்டங்களை எதிர்த்து இந்தியாவின் வரலாற்றிலேயே இல்லாத அளவு பஞ்சாப், ஹரியானா மாநில விவசாயிகள் மிகக் கடுமையாக போராடி வருகிறார்கள். பிற மாநில விவசாயிகளும் அதற்கு முழுமையான ஆதரவு கொடுக்கிறார்கள். இந்த இரு மாநில விவசாயிகள் கடுமையாக இடைவிடாமல் போராடுவதற்குக் காரணம் நாட்டிலேயே அதிக அளவில் இம்மாநிலங்களில் இருந்துதான் அரசு கோதுமையை கொள்முதல் செய்கின்றது. இந்தப் புதிய சட்டங்களால் அதிகம் பாதிக்கப்படப் போவது அவர்கள்தான்.

கார்ப்பரேட்டுகள் தரும் பணத்தில் அதிக வசதிகளையும் தேர்தல் வெற்றிகளையும் அனுபவித்துக் கொண்டிருக்கும் மோடி அரசு விவசாயிகளின் குரலை கேட்பதாக இல்லை.

இன்று விவசாயம் மாநிலங்களின் பட்டியலில் இருக்கின்றது. ஆனால் இந்தப் புதிய சட்டங்கள் மூலம் மாநிலங்களின் உரிமை பறிபோகும் நிலை ஏற்பட்டுள்ளது.

இந்தச் சட்டங்களால் விவசாயிகள் அதிக விலைக்கு பொருட்களை விற்க முடியும். நாட்டில் எங்குவேண்டுமானாலும் பொருட்களை விற்க முடியும். யாருக்கு வேண்டுமானாலும் விற்க முடியும் என்றெல்லாம் அரசு சொல்லும் வாதங்கள் போலியானவை. நடைமுறை சாத்தியமற்றவை என்பது எல்லோருக்கும் தெரிந்தே இருக்கின்றது.

இதைவிடவும் முக்கியமாக மோடி அரசு படிப்படியாக மாநில உரிமைகளில் கைவைத்து அனைத்தையும் மத்திய அரசின் கட்டுப்பாட்டில் கொண்டுவர நினைக்கின்றது. இன்று விவசாயம் மாநிலங்களின் பட்டியலில் இருக்கின்றது. ஆனால் இந்தப் புதிய சட்டங்கள் மூலம் மாநிலங்களின் உரிமை பறிபோகும் நிலை ஏற்பட்டுள்ளது. எனவேதான், ஏற்கனவே பஞ்சாப், ஹரியானா, கேரளா போன்ற மாநிலங்கள் இச்சட்டங்களுக்கு எதிராக தீர்மானங்களை இயற்றியுள்ளன.

இந்தப் புதிய விவசாய சட்டங்களுக்கு எதிரான குரல் என்பது வெறுமனே விவசாயிகளுக்கானது மட்டுமல்ல, ஒட்டுமொத்த இந்திய மக்களுக்கானது. கார்ப்பரேட்டுகளுக்கும் இந்திய விவசாயிகளுக்குமான போரில் யார் இறுதியில் வெல்லப் போகிறார்கள் என்பதை போராட்டங்களின் வலிமையே முடிவு செய்யும்.

●

விளையாட்டை பள்ளிகள் ஆதரிக்க வேண்டும்

- ஜெயவீணா

ஆரோன்

'இந்தியாவின் அதிவேக நீச்சல் வீராங்கனை' என்ற பட்டத்தைப் பெற்றவர், நடிகர் தலைவாசல் விஜய்யின் மகள் ஜெயவீணா. பெரும்பாலும் நடிகர்களின் வாரிசுகள், நடிப்புத் துறையிலேயே கால்பதிக்க ஆசைப்படுவார்கள். ஆனால், ஜெயவீணா அப்படியல்ல. தன்னுடைய இரண்டரை வயதிலிருந்து, நீச்சல் தான் மூச்சு என்று இயங்குகிறார். 22 வயதாகும் ஜெயவீணா, தன்னுடைய 20 வருட அனுபவத்தில், கடந்து வந்த சவால்கள் குறித்து, நம்மோடு இங்கே பகிர்ந்துகொள்கிறார்.

● நீங்கள் இந்தத் துறைக்குள் வந்த சுவாரஸ்ய பயணத்தைப் பற்றி சொல்லுங்கள்!

எங்க அப்பாவை பொறுத்தவரை, அவருக்கு அவருடைய குழந்தைகள், ஏதாவது ஒரு விளையாட்டில் முழு ஈடுபாட்டோட இருக்கணும். காரணம், விளையாட்டுதான் மனதையும் உடலையும் ஆரோக்கியமா வைத்துக்கொள்ள உதவும்னு அவர் நம்புகிறார். அது எந்த விளையாட்டாகவும் இருக்கலாம். அப்படி அப்பாவோட உந்துதலின் பேரில், ஆரம்பத்துல விளையாட்டுல கவனம் செலுத்த ஆரம்பித்தேன். பிற விளையாட்டுகள், பயிற்சிகளை விடவும், நீச்சல் என்னுடைய பெரிய ஆர்வம். அதனால, இதையே முழு முயற்சியோட பண்ண ஆரம்பித்தேன்.

நீச்சல் மீதான என்னோட ஆர்வம் பற்றி சொல்லனும்னா, என்னோட இரண்டரை வயசுல, வேடிக்கை பார்க்கிறதுக்காக நீச்சல் குளத்துக்கு கூட்டிட்டு போனப்போ, நான் துள்ளி குதிச்சேனாம். அந்த ஆர்வத்தைப் பார்த்த என் குடும்பத்தினர், அப்போ இருந்தே பயிற்சி கொடுக்க ஆரம்பிச்சுட்டாங்க. அப்போ இருந்து, இப்போ வரை என்னோட எதிர்நீச்சல் எதுக்காகவும் நிற்கலை. பதினொரு வயதாகும்போது, தேசிய அளவிலான போட்டிகளில் பங்கேற்றேன். அதுக்குப்பிறகுதான், முழுவீச்சில் இந்த துறைக்குள் செயல்பட ஆரம்பித்தேன்.

● பொதுவாக, குழந்தைகள் விளையாட்டு வீரர் ஆவதை பெற்றோர் ஆதரிக்கமாட்டார்கள்! படிப்பா விளையாட்டா என்றால் படிப்புதான் அவர்களது தேர்வு. உங்கள் வீட்டில் உங்களை எப்படி ஊக்கப்படுத்துகிறார்கள் என்று சொன்னால், அது மற்ற பெற்றோர்களுக்கும் ஊக்கமளிக்கும்!

எங்க வீட்டில, தொடக்கத்திலிருந்தே பெற்றோர் ஆதரவு எனக்கு முழுமையா இருந்தது. குறிப்பாக, என் அப்பா. குணச்சித்திர நடிகராகத் தான் எல்லோருக்கும் அவரைத் தெரியும். ஆனா, அவர் அடிப்படையில் ஒரு தேர்ந்த ஜிம்னாஸ்ட். ஜிம்னாஸ்டிங்கிற்கு நேரெதிரான வேறொரு துறையில்,

பரபரப்பா இருந்தப்போ கூட அப்பா எந்த சூழலிலும் தன்னோட உடலை கட்டுக்கோப்பா வைத்துக் கொள்வதில் முழுமையா கவனம் செலுத்தினார். எங்களிடமும் அதைத்தான் எதிர்ப்பார்த்தார். அதனாலேயே, எந்த இடத்துலயும், விளையாட்டுதான் எங்களுக்கான எதிர்க்காலமா இருக்கணும்னு நிர்பந்திக்கவும் இல்லை. ஒருவேளை வருங்காலத்துல எங்களுக்கு வேற துறை மீது ஆசை வந்தால், நாங்க அதற்குள் சென்று அதில் சாதிக்கலாம் என்பதுதான் அப்பா சொல்லும் அறிவுரை. எனக்கு, இந்தத் துறையிலேயே நாம செல்லலாம்னு தோணியதால, அப்பா அம்மாகிட்ட அதை சொன்னேன். அவங்களும் சந்தோஷமா ஏத்துக்கிட்டாங்க.

ஆனா, சொந்தக்காரங்க, குடும்ப நண்பர்கள் எல்லாம் ஒரு கட்டத்துல 'பொம்பள புள்ளைக்கு எதுக்கு நீச்சலெல்லாம்?'னு சொல்லி, நிறம் குறைஞ்சிடும், உடல்நலம் பாதிக்கப்படலாம், உடை சார்ந்த சமரசங்கள் நிறைய செய்ய வேண்டியிருக்கும்னு சொன்னாங்க. அவங்களுக்கெல்லாம் என்னோட பதிலை, என்னுடைய தொடர் வெற்றி வழியா சொன்னேன். அப்புறம், அவங்களே அமைதியாகிட்டாங்க!

● நீங்கள் சமீபத்தில் வாங்கிய விருது என்ன? அடுத்து எந்த போட்டிக்கு தயாராகிக் கொண்டு இருக்கிறீர்கள்?

2019 இறுதியில், தென் ஆசிய விளையாட்டுகளில் வெள்ளி பதக்கமும், ஆசிய விளையாட்டு போட்டியில் வெண்கலப் பதக்கமும் வாங்கினேன். கொரோனா அச்சம் காரணமாக, மேற்கொண்ட போட்டிகள் எதுவும் இப்போதைக்கு திட்டமிடப்படலை. சூழல் சரியாகும்போதுதான் அதுபத்தி யோசிக்கணும். இப்போதைக்கு, படிப்புல கவனம் செலுத்துறேன். இந்த வருஷம்தான், ஸ்போர்ட்ஸ் அண்ட் எக்ஸர்சைஸ் சயின்ஸ் பிரிவுல, என்னோட இளநிலை படிப்பை முடிச்சிருக்கேன். படிப்போட சேர்த்து, நீச்சல் பற்றிய நுணுக்கங்கள் மீதான என்னோட தேடலை நோக்கி பயணிக்கிறேன்.

● போட்டிகளுக்காக நிறைய நாடுகளுக்கு பயணம் செய்திருக்கிறீர்கள். அதில் உங்கள் மனதிற்கு நெருக்கமான வெளிநாட்டு விளையாட்டு சுற்றுப் பயணம் எது? எந்த போட்டியின் வெற்றி உங்களை மிகவும் மகிழ்ச்சிப்படுத்தியது?

என்னோட 11 வயதில், நான் ஒரு தேசிய அளவிலான போட்டியில் பங்கேற்றிருந்தேன். வயது வாரியா, அதில் பங்கேற்ற சின்ன குழந்தை நான்தான். அதேநேரம், அந்த நிகழ்வுல, சின்ன வயதில் அதிக மெடல் அடித்த வீரரும் நான்தான். நிகழ்வோட தொடக்கத்துல அங்கிருந்தவங்க என்னை பார்த்த பார்வைக்கும், மெடல் அடிச்ச பிறகு அவங்க பார்த்த பார்வைக்கும் நிறைய வித்தியாசம் இருந்தது. அந்த நிகழ்வுதான், "நீச்சல்தான் எனக்கான துறை"னு நானும், அப்பா அம்மாவும் தீர்மானமா முடிவெடுக்க முக்கிய காரணமா அமைந்தது. அதனால, எனக்கு ஏற்பட்ட நல்ல அனுபவம்னு அதைத்தான் நான் சொல்வேன்.

● பொதுவாக மன அமைதிக்காக நீச்சல் பயிற்சி மேற்கொள்வது பொதுவான வழக்கம். ஆனால், உங்களுக்கு நீச்சல்தான் வாழ்க்கையே! அப்படியெனில், மன அமைதிக்கு நீங்கள் தேடும் வழி என்ன?

எனக்கு நீச்சல்தான் எல்லாமே. கோபமோ, நஷ்டமோ, வெற்றியோ, தோல்வியோ... எதுவானாலும் நீச்சல் குளத்தில் இறங்கிடுவேன். பொதுவா நீச்சலடிக்கும்போது, நம்முடைய உடலில் இருந்து சந்தோஷத்துக்கான ஹார்மோன்ஸ் அதிகம் சுரக்கும். அதனாலோ என்னவோ, ஒவ்வொரு முறை நீச்சல் குளத்திலிருந்து வெளியில வரும்போதும், என் மனசுக்குள்ள சந்தோஷம் மட்டுமே நிறைஞ்சிருக்கும்.

● அப்பா நடிகர் எனும் போது உங்களுக்கும் சினிமா, சின்னத்திரைக்கான அழைப்பு வந்திருக்குமே...

ஒரு வேலை செஞ்சாலும், அதை சரியாவும், கவனம் சிதறாமலும் செய்ய வேண்டும் என்பதுதான் என்னோட கொள்கை. அதனால, நீச்சலுக்கு மட்டுமே முன்னுரிமை!

● உங்களுடைய லட்சியம் என்ன? நீச்சல்



துறையில், என்ன மாதிரியான சாதனைகளை நீங்க நிகழ்த்தணும்னு நினைக்கிறீங்க?

நீச்சல் துறையில், உலகம் முழுக்க, ஒவ்வொரு முறை செய்யப்படும் ரெக்கார்டு பிரேக்கையும், நான் முறியடிக்கணும், எனக்கு அடுத்து வருபவர்களுக்கு , நான் ஒரு இலக்கு பயிற்சி அமைச்சுக் கொடுக்கனும் என்பதுதான், என்னோட லட்சியம்!

● நம்ம நாட்டில் விளையாட்டு துறை, நீச்சல் துறையின் நிலைமை எப்படி இருக்கிறது? அரசிடம் இருந்து உதவிகள், ஸ்பான்சர் எல்லாம் சரியாக கிடைக்கிறதா?

எனக்கு தனிப்பட்ட முறையில எந்தவொரு குறையும் இல்லை. தமிழ்நாடு அரசு, என்னோட ஸ்பான்சர்ஷிப்பை, நல்லபடியாவே பார்த்துகிட்டாங்க. இந்திய அளவுல நீச்சல் துறையின் நிலைமையை பார்த்தால், இங்க நீச்சலுக்கான பயிற்சி தொடங்கி இறுதிபோட்டி வரை நிறைய விஷயங்களை அறிவுப்பூர்வமா, அறிவியல்பூர்வமா பார்க்கும் திறன் ரொம்பவே குறைவா இருக்கு. அதனால, பிற நாடுகளோட ஒப்பிடும்போது, நாம கொஞ்சம் பின்தங்கியிருக்கோம். அறிவியல் ரீதியா கோச்சிங், ப்ராக்டிஸ் எல்லாம் தரப்பட்டால், இந்தியா பிற நாடுகளைவிட ரொம்ப முன்னேறிய நிலையில் இருக்கும். ஏன்னா இந்தியாவில் இளைஞர்கள் அதிகம். அவர்களை ஊக்கப்படுத்தி முறையா பயிற்சி கொடுத்தா நம்மளால முதலிடத்தை இடத்தை பிடிக்க முடியும்.

● இந்த துறைக்கு வர நினைக்கும் குழந்தைகளுக்கு அவர்களின் பெற்றோர் - பள்ளிகளின் தரப்பில் இருந்து என்ன மாதிரியான ஆதரவுகள் தேவை.?

பெற்றோர் - ஆசிரியர் ஆதரவு இல்லாததால நீச்சல் மேல் காதல் கொண்ட பலருடைய கனவுகள், சிதறிப்போனதை நான் நேரடியாக பார்த்திருக்கேன். இனியும் அப்படியொரு நிலை ஏற்படாமல் இருக்க, இவர்கள் இருவருடைய ஆதரவும், நம் அடுத்த தலைமுறை குழந்தைகளுக்கு கிடைக்க வேண்டியது ரொம்பவே முக்கியம். பெற்றோர் தரப்பில், மனரீதியான ஆதரவு தேவை. பள்ளிகள் தரப்பிலிருந்து, கல்வி ரீதியான ஆதரவுகள் அதிகம் தேவை. என்கூட பயணித்த நிறைய நண்பர்கள், அவங்க ஸ்கூல்ல, அவங்களை ஈவெண்ட்டுக்கு அனுப்ப முடியலன்னு சொன்னதால, மேற்கொண்டு நீச்சலுக்கே வராம இருந்திருக்காங்க. அந்தவகையில பெற்றோரைவிடவும், பள்ளிகள் தரும் ஆதரவு ரொம்ப அவசியம்.

● சமீபத்திய தரவுப் படி, இந்தியாவில் நீச்சல் துறையில் எந்த மாநிலம் முதலிடத்தில் இருக்கிறது? அதற்கு என்ன காரணம்?

மகாரஷ்ட்ரா - கர்நாடகாதான். இந்தப் பகுதிகளில், இயல்பாவே குளிர் கொஞ்சம் அதிகமா இருக்கும். அங்க நீச்சல் பயிற்சி பண்ணும்போது, உடல் வெப்பநிலைக்கு ஏற்றார் போல ஒருகட்டத்துல மாறிடும். இந்த மாற்றம், போட்டிகளில் பங்கேற்கும்போது ரொம்ப உதவியா இருக்கும். சென்னை போன்ற வெப்பமயமான இடத்தில் பயிற்சி எடுக்குற எங்களுக்கும், பெங்களூரு போன்ற பகுதியிலிருந்து வரும் மாணவர்களுக்கும், பெரியளவில் போட்டிகளில் வித்தியாசம் இருக்கும். அவங்க சில தன்மைகளில் எங்களைவிட சற்றே முன்னோக்கி இருப்பாங்க. இதற்கு வேறு காரணங்கள் இருக்கலாம் என்றாலும்கூட, முக்கிய காரணமாக நான் நினைப்பது, அவங்க பயிற்சி செய்யும் இடமும், அங்கிருக்கும் பருவநிலையும்.

● உங்களின் ரோல் மாடல் யார்?

உலக அளவிலான வீரர்களில், மைக்கேல் ஃபெல்ப்ஸ் (*Michael Phelps*) என்னோட ரோல் மாடல். இந்திய அளவில், ரீஷா மிஷ்ரா (*Richa Mishra*).. இவங்க இரண்டு பேரும்தான், எப்பவும் என்னோட உந்துசக்தி.

● நீச்சல் பயிற்சியின் போது உங்களுக்கு ஏற்பட்ட ஒரு நல்ல அனுபவம் - ஒரு மோசமான அனுபவம்!

கேலியா சொல்லணும்னா, நான் வெற்றி பெற்ற எல்லா போட்டிகளும், என்னோட நல்ல அனுபவம் - நான் பதக்கம் வாங்காம வெளியேறின எல்லா போட்டிகளும், என்னுடைய மோசமான அனுபவம்! ●

தன்னந்தனிமை

மங்கேஷ் நாராயணராவ் கலே
(மராத்திய மொழி கவிதை)

ஆங்கிலம் வழி தமிழில்:
ஆ.அமிர்தராஜ்

வீட்டில் அவன்
தனியே தங்கியுள்ளான்.
அதே வீட்டில் தான் குடியிருக்கிறார்கள்
அவனது மனைவியும், பிள்ளைகளும்.
அப்போது கூட
வீட்டில் அவன்
தன்னந்தனியாக இருக்கிறான்.

மனைவிக்குள்ளது
அவ்வீட்டிற்குள்ளேயே ஒரு வீடு.
அவள் அவ்வீட்டில் தனியாக
தங்கியுள்ளாள்
அவனுமே வீட்டில்
தன்னந்தனியாக இருக்கிறான்.

பிள்ளைகளுக்கும் கூட ஒரு வீடுள்ளது
அவ்வீட்டிற்குள்ளேயே.
அவர்கள் அவ்வீட்டில் தனியே
தங்கியுள்ளனர்.
அவன் அப்போதும்
தன்னந்தனியே இருக்கிறான்
தன் சொந்த வீட்டில்.

தனிமைக்கும் இருக்கிறது
அவ்வீட்டிற்குள்ளேயே ஒரு வீடு.
அவ்வீட்டிலேயே தனிமையும்
தனியாகவே தங்கியுள்ளது.
எப்போதும் அவன்
வீட்டிலே தன்னந்தனியாக
இருக்கிறான்.

அவ்வீட்டிற்குள் உள்ள வீடுமே
தனியாக உள்ளது.
ஒரு வீட்டை முற்றும் ஆக்கிரமித்துள்ளது
ஒரு வீடு.
இரவெல்லாம் தன்னந்தனியாக
அவ்வீட்டிலிருக்கிறான் அவன்.

வீட்டில் அவன்
தனியாக தங்கியுள்ளான்.
அவனது மனைவியும், பிள்ளைகளுமே
தனியாக தங்கியுள்ளனர்.
தனிமையுமே அவ்வீட்டில்
தனியாக தங்கியுள்ளது.

அவ்வீட்டில்
அவனும் தான் தனியாக
தங்கியுள்ளான். ●



அம்மாவுக்கு மட்டும்

பிரபஞ்சன்

நாலரைக்கு அலாரம் வைத்துவிட்டுப் படுத்தவள் சாந்தா. அலாரம் அதன் கடமையை ஒழுங்காகச் செய்தது. எழுந்து அதை நிறுத்தினாள். முகம் கழுவிக் கொண்டு மீண்டாள். சித்து எழுந்து படுக்கையில் அமர்ந்திருந்தான்.

‘‘அம்மா, எனக்குத் தூக்கம் வரலை’’ என்றான் சித்து. அப்போதுதான் பறித்த வெள்ளைத் தாமரை போல இருந்தது, அந்தக் குழந்தையின் கண்கள்.

“என்னது, தூக்கம் வரல்லையா?”

“உம்.”

‘‘மணி நாலரைதானே ஆகிறது. குழந்தைகள் அதற்குள் எழுந்துகொள்ளக் கூடாது. இன்னும் கொஞ்ச நேரம் தூங்கு. அப்புறமா எழுப்பறேன்.”

‘‘நீ மட்டும் இத்தனை மணிக்கு எழுந்திருக்கலாமா?”

சாந்தா சிரித்தாள்.

“நான் பெரியவள்.”

சித்து எழுந்து, அவள் பக்கத்தில் நெருக்கிக் கொண்டு நின்றான். சாந்தாவின் இடுப்புக்கு அவன் வளர்ந்திருந்தான். அவன் எவ்வளவு வளர்ந்துவிட்டான்!

‘‘நானும்தான் வளர்ந்துவிட்டேன். நானும்தான் பெரியவன்.”

சாந்தாவுக்குச் சிரிப்பு வந்தது. உரக்கச் சிரிக்கக் கூடாது. சேகர், அயர்ந்து உறங்கிக் கொண்டு இருந்தான். சாந்தா கள்ளக்குரலில் சித்துவுக்கு மட்டும் கேட்கும்விதமாகச் சொன்னாள்.

“லூட்டி பண்ணாதே. அப்பா தூங்கறாங்க. பேசாமே, படுத்துத் தூங்கு.”

“எனக்குத் தூக்கம் வரலையே அம்மா.”

“கண்ணை மூடிக்கோ, தூக்கம் வரும்.”

“கண்ணை மூடிக்கிட்டா, இருட்டுதான் வருது.”

இனிமேலும் பேசிக்கொண்டு நிற்கக் கூடாது என்று தோன்றியது சாந்தாவுக்கு. அவளுக்கு நிறைய வேலை இருந்தது. நாளெல்லாம் ஒழியாத வேலை. அதிகாலையில் வீட்டு வாசலில் தண்ணீர் தெளிப்பது, தெருக்கூட்டுவதில் இருந்து அவள் ஒரு நாள் வாழ்க்கை தொடங்குவதாக இருந்தது.

சித்து, அம்மா நீர் தெளிப்பதைப் பார்த்துக்கொண்டு நின்றான். தெரு, கன்னங்கரேல் என்று இருண்டு கிடந்தது. பயமாகக் கூட இருந்தது. அம்மா கூட

இல்லையென்றால், சித்து அங்கே நின்று இருக்கமாட்டான். நிச்சயமாக அங்கு பேய் இல்லாமல் இருக்காது. இருட்டு என்றால் பேய். 'பரட் பரட்' என்று அம்மா தெருப் பெறுக்குவதை, சப்தம் ரூபமாகக் கேட்டுக் கொண்டு நின்றிருந்தான். பெருக்கி முடித்து, கோலம் போடத் தொடங்கினாள் சாந்தா.

"அம்மா, தேர்க்கோலம் போடு."

"ஐயோ... அதெல்லாம் முடியாது அதுக்குள்ளே விடிஞ்சிடும்'' சின்னதாக, ஒரு பூக்கோலம் போட்டாள், சாந்தா. அவசரம், அவள் கைகளுக்கு அசாதாரணமான வேகத்தைக் கொடுத்தது. கோலம் போட்டு உள்ளே வந்தவள், அடுப்பைப் பற்ற வைத்துப் பால் காய்ச்சி, காபிக்கு ஆயத்தமானாள். சித்துவுக்குப் பால். மற்றவர்களுக்குக் காபி.

காபிக் கடை முடிந்ததும், கடைக்குக் கிளம்பினாள். தெரு முனையில் இருந்தது காய்கறிக்கடை. நேற்றைய காய்கறிகள். கடைக்காரன் பேச்சு மாத்திரம், பசுமையாக இருந்தது. விலை, யானை குதிரை விலை. "தபாலுக்குத்தான் ஸ்டிரைக். வெங்காயத்துக்கும் பூசணிக்குமா ஸ்டிரைக்?'' தபால் வண்டிகளில்தானே காய்கறியும் வருகிறது" என்றான் காய்கறிக்காரன். என்ன சாமர்த்தியம் பண்ணுகிறார்கள், வியாபாரிகள்!

வீட்டுக்கு வந்து, சமையலைத் தொடங்கினாள், சாந்தா. வெளியே புல் தரையில் அமர்ந்து, காலைக் காற்றை அனுபவித்துக் கொண்டு, பேப்பர் வாசித்துக் கொண்டிருந்தான், சேகர். சித்து, இட்லியைச் சாப்பிட்டுப் பள்ளிக்குக் கிளம்பினான். சேகர் குளித்து அவசரம் தோன்றச் சாப்பிட்டான்.

''என்ன அவசரம், சாப்பிடக் கூட? நிதானமாகத்தான்

"இல்லை. வீட்டுல சும்மாத்தான் இருக்கா" என்றான், சேகர்.

சேகர், அலுவலகம் சென்றான். மலையாகக் குவிந்திருக்கும், அழுக்குத் துணிகளை எடுத்துக் கொண்டு, கிணற்றடிக்குச் சென்றாள், சாந்தா.

மாலை ஏழு மணிக்குத் திரும்பி இருந்தான், சேகர்.

காலைப் பத்திரிகையை விட்ட இடத்திலிருந்து படிக்கத் தொடங்கினான், அவன்.

காபி எடுத்துக் கொண்டு வந்து அவனிடம் தந்தாள், சாந்தா.

சித்து வீட்டுப்பாடம் எழுதிக் கொண்டிருந்தான்.

''சட்டைப் பையில் சம்பளக் கவர் இருக்கு. எடுத்துக்கோ."

"சரி."

"கொஞ்சம் சிக்கனம் வேணும் சாந்தா. மாசக் கடைசியில். கடன்

''கடன் வாங்கும்படியா, இந்த மாசமும் வச்சுடாதே. இதுக்காக நான் எவ்வளவு கஷ்டப்பட வேண்டி இருக்கு தெரியுமா? வீட்டுல, வேலையே இல்லாம, 'ஹாய்யா' உட்கார்ந்திருக்கிற உனக்கு அதெல்லாம் தெரியாது.''

சமையல். காலைப் பலகாரம், இட்லி. இட்லி என்றால் சும்மாவா? மல்லிகைப் பூவாய் இருக்க வேண்டும், சேகருக்கு. அதைச் சுற்றி, மூட்டை மூட்டையாகக் குறைந்தபட்சம் இரண்டு வகை சட்னிகளாவது வேணும். தேங்காய் கட்டாயம், மற்றபடி கறிவேப்பிலை, வெங்காயம், காரம் என்று ஒரு நாளைக்கு ஒரு சட்னி, இதில்லாமல் மிளகாய்ப் பொடி எண்ணெய், நிரந்தரமாக டைனிங் டேபிளின் மேல் இருந்தாக வேண்டும்.

இட்லிகளை எடுத்துப் போட்ட தட்டில் இருந்து, சாம்பிராணிப் புகை மாதிரி, குப்பென்று எழுந்தது ஆவி. பாலைக்குடித்த சித்து, பள்ளிக்கூடம் புறப்படத் தயாராகிக் கொண்டான். பிளாஸ்டிக் பையை எடுத்துக்கொண்டு சாந்தா காய்கறிக்

சாப்பிடுங்களேன்."

"உனக்கு என்ன தெரியும்? அஞ்சு நிமிஷம் தாமதமானால் கூட, மானேஜர் முகத்தைப் பார்க்க வேணுமே, ஜாலியாக வீட்டில் இருந்துகிட்டு, பொழுதைப் போக்கறே. நான் படுற அவஸ்தை யாருக்குத் தெரியும்'' என்றான், சேகர்.

சாப்பிட்டுப் புறப்படும்போது, சேகருடைய அலுவலக நண்பர் வந்தார். முதல் முதலாக வருகிறவர்.

சாந்தா காபி கொண்டு வந்து கொடுத்தாள்.

"என் மனைவி" என்று அறிமுகம் செய்து வைத்தான் சேகர்.

காப்பியை உறிஞ்சியபடி நண்பர் கேட்டார்.

"வேலைக்குப் போறாங்களா?"

வாங்கும்படியா, இந்த மாசமும் வச்சுடாதே. இதுக்காக நான் எவ்வளவு கஷ்டப்பட வேண்டி இருக்கு தெரியுமா? வீட்டுல, வேலையே இல்லாம, 'ஹாய்யா' உட்கார்ந்திருக்கிற உனக்கு அதெல்லாம் தெரியாது."

சாந்தா சிரித்துக்கொண்டு சொன்னாள்.

"எதிர்பாராமே, போன மாசம், விருந்தாளிகள் வந்துட்டாங்க, இல்லீங்களா? அதான், கூடுதல் செலவு. இந்த மாசம், அந்தக் கவலை வேணாம்."

"கொஞ்சம் சிக்கனமா இருக்கக் கத்துக்கணும், சாந்தா."

''வேலைக்காரியையும் நிறுத்திட்டேன். மேலும் என்ன சிக்கனம் பண்ணணும்னு தெரியலை. முயற்சி பண்றேங்க."

“ஆபீஸ்ல நாலு ஆள் வேலையை நான் செய்யறேன். இடுப்பு ஒடியுது. ரொம்பக் களைப்பா ஆயிடுது... வீட்டுல சும்மா இருக்கிற உனக்கு எங்க கஷ்டம் விளங்காது.”

‘‘ராத்திரிக்கு என்ன சமைக்கட்டும்?”

“கெட்டியா, வத்தக் குழம்பு வை. உருளைக் கிழங்கு இருக்கா. இருந்தா காரமா, பொரியல் பண்ணு.”

“சரி.”

இரவு சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போது, சேகர் கவனித்தான்.

“என்ன சாந்தா, நீ வத்தக் குழம்பு போட்டுக்கலையா?”

‘‘இல்லைங்க. உங்களுக்கு மட்டும்தான் குழம்பும், பொரியலும். நானும் சித்துவும், காலை சாம்பாரையே போட்டுக்கிட்டோம். ஊறுகாய் தொட்டுக்கிட்டோம். காலையிலே மிஞ்சினதை என்னத்துக்கு வேஸ்ட் பண்ணணும்னுதான்.”

சேகர், அதை ஏற்றுக் கொண்டிருந்தான். மறுபேச்சில்லாமல் கொஞ்ச நாழிகை டி.வி. பார்த்துக் கொண்டிருந்தான். உறக்கம் கண்ணைச் சுற்றிக் கொண்டிருந்தது.

“எனக்குத் தூக்கம் வருது. நான் படுக்கப் போறேன். சித்து, உனக்குத் தூக்கம் வரலை.”

“இல்லப்பா.”

‘‘உங்களுக்கென்ன? அம்மா, வீட்டுக்குள்ள மகாராணியா இருக்கா. நீ படிக்கிறே.. உங்களுக்கு உடம்புக் கஷ்டம் எங்கே தெரியப் போவுது. காலைலே, பஸ்சுல நசுங்கி, நடந்து, ஆபீஸ்லே கஷ்டப்பட்டு, வீடு வந்து சேர்றதுக்குள்ளே, நான் படற கஷ்டம், எனக்குத்தான் தெரியும்.”

சாந்தா சிரித்துக்கொண்டு சொன்னாள்.

“பால் சுட வைக்கட்டுமா?”

“சரி.”

சாந்தா அடுப்பறைக்குப் போனாள்.

“அப்பா” என்றான் சித்து.

“என்னடா?”

‘‘எதுக்கப்பா இத்தனை கஷ்டப்படறே?”

சேகர் சிரித்தான்.

“கஷ்டப்படலேன்னா, சம்பளம் சுளையா மூவாயிரம் யார் கொடுப்பா?”

“அப்பா?”

“என்னடா, சொல்லு.”

‘‘உனக்கு ஆபீசுல சம்பளம் கொடுக்கிறாங்க. அம்மாவுக்கு யாருப்பா சம்பளம் கொடுப்பா?”

“அம்மாவுக்கு சம்பளமா?”

‘‘அம்மாவும்தானே வேலை செய்யறாங்க? காலையிலே உனக்கு முந்தே எழுந்திருச்சிருக்காங்க. தெரு பெறுக்கி, காபி போடறாங்க. சோறு ஆக்குறாங்க. துணி துவைக்கிறாங்க. வீடு கழுவி விடறாங்க... ராத்திரியும் சோறு ஆக்குறாங்க. இதுக்கெல்லாம் சம்பளம் தர வேணாமாப்பா, நீ? ஆபீசுல நீ வேலை பார்க்கிறதுக்கு உனக்கு சம்பளம். வீட்டுல வேலை பார்க்கிறதுக்கு அம்மாவுக்கு யார் சம்பளம் கொடுப்பா?”

பதில் சொல்லத் தோன்றாமல் அமர்ந்திருந்தான், சேகர்.

நன்றி: **இருட்டின் வாசல்**
- கவிதா வெளியீடு.

குருவின் தற்பெருமை

சீடன் ஒருவன் ஒரு நதியைக் கடக்க வேண்டியிருந்தது. அவன் தன் குருவின் அபார ஆற்றல் மீது மிகுந்த நம்பிக்கை கொண்டவன்.

அதனால் சற்றும் யோசிக்காமல் தன் குருவின் பெயரை உச்சரித்த வாறே தண்ணீர் மீது நடக்க ஆரம்பித்தான். தண்ணீருக்குள் மூழ்கி விடாமல் நடந்து சென்று நதியைக் கடந்தான்.

இதைப் பார்த்து வியந்தார் அவனது குரு.

என்னுடைய பெயருக்கே இவ்வளவு ஆற்றல் இருக்கிறதே! அப்படியானால் நான் எவ்வளவு ஆற்றல் கொண்டவனாக இருக்க வேண்டும்? என்று கணக்குப் போட்ட அவருக்கு மனதில் கர்வம் தோன்றியது. தன்னாலும் நீரின் மேல் நடக்க முடியும் என்று நினைத்தார்.

மறுநாள் அந்த குரு நான்! நான்! நான்! என்று சொல்லிக் கொண்டே நதியின் மீது நடக்க ஆரம்பித்தார். அப்போது என்ன நடந்தது தெரியுமா? குரு நினைத்ததற்கு மாறாக அவர் நதியில் மூழ்கி விட்டார். அவருக்கு நீச்சல் தெரியாததால் இறந்து போனார்.

நீதி: நம்பிக்கையினால் அற்புதங்களும் நிகழும். ஆனால் தற்பெருமையும் கர்வமும் அழிவைத்தான் தரும்.

சீடனின் தற்பெருமை



ஒரு ஜென் குருவும் அவரின் சீடரும் ஒரு ஆற்றங்கரையில் நின்றிருந்தார்கள். குரு கால் இடறி தண்ணீருக்குள் மூழ்க இருந்த நேரத்தில் சீடன் அவரைக் கை பிடித்துக் காப்பாற்றினான்.

ஆசிரமத்திற்குச் சென்றதும் அவன் மற்ற சீடர்களிடம் சென்று தான் குருவைக் காப்பாற்றிய விஷயத்தைச் சொல்லிப் பெருமைப் பட்டுக் கொண்டிருந்தான். குரு அதில் அவனுடைய சிறுமையைப் பார்த்தார்.

அடுத்த நாள் அதே இடத்திற்கு அவனை அழைத்துச் சென்றார். "தயவு செய்து என்னைத் தண்ணீரில் தள்ளிவிடு" என்றார்.

சீடனுக்கு எதுவும் புரியவில்லை. அவர் சொன்னது மாதிரியே செய்தான். மெல்ல நீந்திக் கரைக்கு வந்தார் குரு. அதன் பிறகு சீடன் தன் குருவைக் காப்பாற்றியதை நினைத்துப் பெருமைப்படவில்லை.

வாழ்வை மேம்படுத்தும் அன்புக் கருணைக்கான தியானம்!

ஜெ

தியானம் என்பது இன்றைய வாழ்க்கைக்கு மிக அவசியமான தாகிறது. மன அமைதியோடு வாழவும் தெளிவாக சிந்திக்கவும் சச்சரவுகளை அகற்றவும் தடையின்றி முன்னேறவும் தியானம் செய்ய வேண்டும். தியானத்தில் பல வகை உண்டு. உலகளவில் பிரபலமாகிவரும் அன்பு-கருணை தியானம் (*Loving Kindness Meditation - LKM*) தனக்கும் மற்றவர்களுக்கும் ஒரே நேரத்தின் நன்மையை விதைக்கும் ஓர் அற்புதமான தியான முறையாகும்.

இந்த தியானத்தை மேற்கொள்கிறவர்கள் நாளடைவில் மன்னிப்பு, பிறரை ஏற்றுக் கொள்ளுதல், சுயத்தை அங்கீகரித்தல் போன்ற நல்ல பண்புகளை வளர்த்துக் கொள்கின்றனர். இந்த தியான முறையானது அத்தனை எளிதானதல்ல. ஏனெனில் நாம் நமக்கும் அதே போல மற்றவர் களுக்கும் அன்பையும் கருணையையும் அனுப்புகிறோம். தொடர்ந்து பயிற்சி செய்வதால் மட்டுமே உங்கள் அன்பை நீங்கள் பெறவும் பிறருக்கு அனுப்பவும் முடியும் என தியான நிபுணர்கள் கூறுகின்றனர்.

அன்புக் கருணைத் தியானத்தை செய்வதற்கான வழிமுறைகள்

இந்த வகையான தியானத்தை செய்ய பவுத்த பாரம்பரியத்தில் நிறைய வழிமுறைகள் உள்ளன. ஆனால், அதன் அடிப்படை ஒன்றுதான். இந்த தியானத்தின் போது நீங்கள் அன்பையும் கருணையும் நோக்கமாக்கி அந்த இலக்கை உங்களுக்கும் பிறருக்கும் அனுப்புகிறீர்கள் என்பதே!

மிகவும் எளிமையான வழி முறையை இப்போது பார்ப்போம்! சில நிமிடங்கள் செய்தால் கூட போதுமானது. அதுவே நல்ல பயனை நாளடைவில் அளிக்கும்.

- எந்த தொந்தரவும் நேராத அமைதியான ஓர் இடத்தை தேர்ந்தெடுங்கள். உங்களுக்கு வசதிப்பட்ட வகையில் தியான நிலையில் அமருங்கள். கண்களை மூடி, தசைகளை தளர்த்துங்கள். உங்கள் இயல்பான மூச்சை கவனித்து சற்று அழுத்தமாக மூச்சு விடுங்கள்.
- உங்கள் மனதும் உடலும் முழுமையான ஆரோக்கியத்தை அடைவதாக கற்பனை செய்யுங்கள். நீங்கள் ஆழமான மன அமைதியை பெறுவதாக நினைத்துப் பாருங்கள். பின் அந்த எண்ணத்தை ஓர் உணர்வாக மாற்றுங்கள். அதாவது நீங்கள் நலமோடு இருக்கும் சிந்தனை உங்களுக்கு எப்படிப்பட்ட மகிழ்ச்சியான உணர்வை அளிக்குமோ அந்த உணர்வை கொண்டு வாருங்கள். அந்த உணர்வு தான் உங்களை நேசிப்பதற்கான சரியான தருணம். அந்த தருணத்தில் உங்களை நேசிப்பதற்காக உங்களுக்கு நீங்களே நன்றி சொல்லுங்கள். உங்களுக்கு அப்போது மன அமைதி உண்டாகும் அதில் கவனத்தை கூர்மைப் படுத்துங்கள்.
- பின்னர் அதே மனநிலையோடு மூச்சில் கவனத்தைத் திருப்பி வெளியேற்றும் சுவாசத்தின் வழியே உங்கள் பிரச்சனைகளையும் எதிர்மறை எண்ணங்களையும் வெளியேற்றுவதாக கற்பனை செய்யுங்கள். உள்ளிழுக்கும்

சுவாசத்தின் வழியே அன்பையும் கருணையையும் உள்ளிழுப்பதாக நினைத்துப் பாருங்கள்.

* சில நிமிடங்களுக்குப் பின்னர், மூச்சை கவனித்தப்படியே இந்த வாக்கியங்களை மனதிற்குள் உச்சரியுங்கள்.

- நான் மகிழ்ச்சியாக இருக்கிறேன்
- நான் பாதுகாப்பாக இருக்கிறேன்
- நான் ஆரோக்கியமாக, அமைதியாக மற்றும் உறுதியாக இருக்கிறேன்
- நான் இன்று அன்பை பெறவும் கொடுக்கவும் செய்கிறேன்.

இதே உணர்வில் சற்று நேரம் லயித்திருங்கள். உங்கள் கவனம் சிதறுகிற பட்சத்தில் அதை பற்றி கவலைப்படாமல் மீண்டும் மூச்சை கவனியுங்கள். அதே அன்பான உணர்வை கொண்டு வாருங்கள்.

- அதன் பின்னர் அதே உணர்வோடு அதே வாக்கியங்களை உங்கள் அன்பிற்குரியவர்களுக்காக சொல்லுங்கள். உங்கள் துணை, குழந்தைகள், பெற்றோர், நண்பர்கள் யாராகவும் இருக்கலாம். அவர்கள் மீது அன்பையும் நன்றியுணர்வையும் உருவாக்குங்கள். அதே உணர்வோடு இந்த வார்த்தைகளை உச்சரியுங்கள்.
- என் அன்பிற்குரியவர்கள் மகிழ்ச்சியாக இருக்கட்டும்
- என் அன்பிற்குரியவர்கள் பாதுகாப்பாக இருக்கட்டும்
- என் அன்பிற்குரியவர்கள் ஆரோக்கியமாக, அமைதியாக மற்றும் உறுதியாக இருக்கட்டும்
- என் அன்பிற்குரியவர்கள் அன்பை பெறவும் கொடுக்கவும் செய்யட்டும்.

அன்பிற்குரியவர்களுக்கு பின்னர் உங்கள் வாழ்வின் பிற மனிதர்களை மனதிற்குள் கொண்டு வாருங்கள். அவர்களுக்கும் நலமும் மன அமைதியும் கிடைப்பதாக நினைத்துப் பாருங்கள். அதே உணர்வை உங்கள் உறவினர்கள், நண்பர்கள், அண்டை வீட்டார், எதிரிகள், வேண்டாதவர்கள் எல்லோருக்கும் கடத்துங்கள். உலகில் உள்ள எல்லா மனிதர்களையும் உயிர்களையும் உங்கள் தியானத்தில் சேர்த்துக் கொள்ளுங்கள். அன்பு மற்றும் கருணையோடு அதே வாக்கியங்களை எல்லா உயிர்களுக்காகவும் சொல்லுங்கள்.

- எல்லா உயிர்களும் மகிழ்ச்சியாக இருக்கட்டும்
- எல்லா உயிர்களும் பாதுகாப்பாக இருக்கட்டும்
- எல்லா உயிர்களும் ஆரோக்கியமாக, அமைதியாக மற்றும் உறுதியாக இருக்கட்டும்
- எல்லா உயிர்களும் அன்பை பெறவும் கொடுக்கவும் செய்யட்டும்.
- சில நிமிடங்களுக்கு பிறகு நிறைந்த மன அமைதியோடு இப்போது கண்களை திறக்கலாம். எப்போதெல்லாம் மனத் தொந்தரவை எதிர்கொள்கிறீர்களோ அப்போது உங்கள் தியானத்தையும் அன்புக் கருணையையும் உணர முயற்சியுங்கள். அந்த உணர்வோடு சற்று நேரம் மூச்சை கவனிக்கப் பழகுங்கள். நாளடைவில் எதிர்மறை எண்ணங்கள் எழுவது காணாமல் போய்விடும்.

சில கூடுதல் குறிப்புகள்!

பொதுவாக இந்த தியானத்தின் மையப்புள்ளி என்பது நீங்கள்தான். ஏனெனில் எல்லோருக்கும் தன் மீது அன்பும் அக்கறையும் இருக்கும். தான் முன்னேற வேண்டும், ஆரோக்கியமாக வாழ வேண்டும், பொருளீட்ட வேண்டும், சாதிக்க வேண்டும் போன்ற சுயம் சார்ந்த விருப்பங்கள் இருக்கும். எல்லா பிரார்த்தனைகளின் தொடக்கமும் நாமாகவே இருக்கிறோம் என்பதால் உங்களை நீங்களே இந்த தியானத்தின் மையப்புள்ளியாக வைத்துக் கொள்ளுங்கள்.

உங்களை நீங்கள் எவ்வளவு நேசிக்கிறீர்கள் என்பதை கற்பனை செய்யுங்கள். பின்னர், நீங்கள் மிகவும் நேசிக்கும் நபர்/நபர்களை மனதில் நிறுத்துங்கள். அவர்கள் மீது நீங்கள் எவ்வளவு அன்பு வைத்துள்ளீர்கள், கருணை கொண்டுள்ளீர்கள் என்று சிந்தியுங்கள். பின்னர் அதே உணர்வை உங்களுக்கு பிடிக்காத கடினமான நபர்களுக்கும் கடத்துங்கள். உங்களை வெறுக்கும் அல்லது நீங்கள் வெறுக்கும் நபர்களுக்கும் நீங்கள் அன்பையும் கருணையையும் தியானத்தின் வழியே அனுப்புகிறீர்கள்.

பின்னர் அப்படியே எல்லையை விரித்து இவ்வுலகின் எல்லா மனிதர்களுக்கும் உயிர்களுக்கும் எல்லையற்ற உங்கள் அன்பையும் கருணையையும் பகிருங்கள். இதை நீங்கள் உங்களுக்கு வசதிப்பட்ட வகையில் காட்சிப்படுத்தலாம். சம்பந்தப்பட்டவர்களின் முகங்களை மனதில் நிறுத்தலாம். குறிப்பிட்ட சம்பவத்தை கற்பனை செய்து பின்னர் அன்பையும் கருணையையும் அனுப்பலாம். அன்பை ஒரு ஒளியாக கற்பனை செய்து அதை சம்பந்தப்பட்டவர்களிடமோ அல்லது உலகம் முழுக்கவோ பரவுவதைப் போன்றோ சிந்திக்கலாம்.

●

வங்கிசார் மோசடிகள்: தப்பிக்கும் வழிகள்!

தேவஸ்ரீ

பெரும் தொழிலதிபர்கள் கடன் வாங்கி வங்கியிடமே மோசடியில் ஈடுபடுவது ஒரு புறம் நடக்க, தனி நபர் வங்கி கணக்கில் இருந்து அவர்களது அறியாமையை பயன்படுத்தி பணம் சுருட்டும் கும்பல் பெருகி வருகிறது. விழிப்புணர்வு இல்லாமல் இருந்தால் உழைத்து சேர்த்த பணம் ஒரே நொடியில் மாயமாகிவிடும். எப்படி எல்லாம் பணம் பறிப்பு நடக்கிறது என்பதை முதலில் பார்க்கலாம்.

வீட்டை நோட்டமிட்டு, சுவர் ஏறி குதித்து, பூட்டை உடைத்து திருடுவது எல்லாம் பழைய வழிமுறை ஆகிவிட்டது. தற்போது இருக்கும் மெத்த படித்த திருடர்கள், நாம் அசறும் வேளையில் இருக்கும் இடத்திலிருந்தே ஒரு இணையதள இணைப்பு அல்லது ஒரு செல்போன் அழைப்பு மூலம் வங்கி கணக்கிலிருக்கும் பணத்தை துடைத்து எடுத்துவிடுகிறார்கள். இன்றைக்கு ஏ.டி.எம்., பயன்படுத்தாத நபர்களே இல்லை என்ற நிலை வந்துவிட்டது. அது பற்றி அறிந்தவர்கள், அறியாதவர்கள் என எல்லோருக்கும் வங்கிகள் ஏ.டி. எம்.,களை வழங்குகின்றன.

“கார்டு மேல இருக்க நம்பர் சொல்லுங்க!”

ஏ.டி.எம்., மூலம் மட்டும் ஆண்டுக்கு பல கோடி ரூபாய் சுருட்டும் கும்பல்கள் இருக்கின்றன. முதலில் இவர்கள் வங்கி கணக்கு வைத்திருப்பவர்களின் தகவல்களை திரட்டுகிறார்கள். அவர்களது வங்கி கிளை பெயர், மொபைல் எண் போன்றவைகள் அதில் அடங்கும். இதை தெரிந்துகொண்ட உடன் வங்கி அதிகாரி போன்று பேசி ஏ.டி.எம்., கார்டு காலாவதி ஆகிவிட்ட தாகவும், மாற்றவில்லை என்றால் பணம் எடுக்க முடியாது என்று கூறுவார்கள். முக்கியமாக முதியவர்கள், விழிப்புணர்வு இல்லாத பெண்கள் தான் இவர்களின் குறி.

அவர்களிடம் இது போன்று பேசி ஏ.டி.எம்., கார்டின் 16 இலக்க எண்கள், சி.வி.வி., எண் ஆகியவற்றை பெற்று, ஓ.டி.பி.,ஐயும் தெரிந்துகொண்டு பணத்தை எடுத்துவிடுகின்றனர். இதனை ஜார்கண்டின் ஜம்தாரா என்ற மாவட்டத்தில் ஒரு கும்பல் தொழிலாகவே செய்து வந்தது. 2016- ல் அவர்களை காவல்துறை கைது செய்தனர். ஆனால் இன்னமும் இது போன்ற வங்கி மோசடிகள் தொடர்கிறது. விழிப்புணர்வு இல்லாமல் இருந்தால் பணத்தை இழந்து காவல் நிலையத்திற்கும், வங்கிக் கிளைக்கும் நடக்க வேண்டி இருக்கும். இது போன்ற முறையில் பணத்தை இழந்தால் வங்கிகளும் பொறுப்பேற்காது.

யு.பி.ஐ., பின் (UPI pin) - ஜாக்கிரதை

ஸ்மார்ட்போன்கள் பரவலான பிறகு அலைபேசி மூலம் ஒரு கிளிக்கில் பணப்பரிமாற்றம் வந்துவிட்டது. கூகுள், வாட்ஸ்அப், பேடிஎம், போன்பே ஜியோ என

பெரு நிறுவனங்கள் இதில் நுழைந்துள்ளன. இந்தியாவில் 100 கோடி டாலராக இருக்கும் இதன் சந்தை மதிப்பு, 2023-ல் ஒரு லட்சம் கோடி டாலராக உயர்ந்திருக்கும் என 'கிரெடிட் சூஸ்' என்ற நிறுவனம் கணித்துள்ளது. அவ்வளவு பணம் புழங்கும் போது ஆபத்தும் அதே அளவு அதிகரிக்கும். யு.பி.ஐ., எனப்படும் ஒருங்கிணைந்த பணப்பரிமாற்ற இணைப்பு மூலம் இந்த வசதி இந்தியாவில் செயல்பட்டு கொண்டிருக்கிறது.

வங்கியில் பதிவு செய்துள்ள அலைபேசி எண்ணை கொண்டு இந்த பணப்பரிமாற்ற செயலிகளில் கணக்கு தொடங்கலாம். பின்னர் யு.பி.ஐ., கடவுச்சொல்லை உருவாக்கி, அதை பயன்படுத்தி பணத்தை அனுப்பலாம், பெறலாம். இதனை குறி வைத்துதான் இன்று பல சைபர் கிரிமினல்கள் கிளம்பியுள்ளனர். ஒரு லிங்கை குறுஞ்செய்தியாக அனுப்புவார்கள். குறிப்பிட்ட தொகை உங்களுக்கு பரிசாக கிடைக்கும் என அதில் குறிப்பிடப்பட்டிருக்கும். தெரியாத நபர்கள், நிறுவனங்கள் அனுப்பும் லிங்கை கிளிக் செய்தால் அவை பணம் செலுத்தும் செயலிக்கு அழைத்துச் சென்று பணத்தை எடுத்துக்கொள்ளும்.

'புத்தாண்டு வாழ்த்து அனுப்பியிருக்கிறேன்', 'பிலிப்கார்ட், அமேசானில் பரிசுப் பொருட்கள் உங்களுக்கு கிடைத்துள்ளது' என்றெல்லாம் அந்த லிங்கில் குறிப்பிடப்பட்டிருக்கும். இதனை பொருட்படுத்தக் கூடாது. சமீபத்தில் கொரோனா பிரச்சனையால் தவணை முறையை ஒத்திவைக்க வங்கிகளுக்கு ரிசர்வ் வங்கி உத்தரவிட்டிருந்தது. அதனை வாய்ப்பாக பயன்படுத்திக் கொண்டு, கடனை ஒத்திவைக்க வாடிக்கையாளர் அடையாள எண்ணை (*Customer ID*) தெரிவிக்கும் படி கூறி மோசடி செய்துள்ளனர். இந்த வாடிக்கையாளர் அடையாள எண் மற்றும் ஆதார் இருந்தால் போதும், உங்களுக்கு தெரியாமல் உங்கள் பெயரில் கடன் எடுக்கலாம்.

தென் இந்தியாவில் மட்டும் கடன் செயலிகளில் சுமார் 300 கோடி ரூபாய்க்கு சீன நிறுவனங்கள் முதலீடு செய்திருப்பது விசாரணையில் தெரியவந்துள்ளது. இது குறித்து தற்போது தான் அமலாக்கத்துறை விசாரணை நடத்தி வருகிறது.

மேலும் பி.எம்., கேர்ஸ் அறக்கட்டளை பெயரில் போலியாக யு.பி.ஐ., ஐடி உருவாக்கி பணம் பெற்றுள்ளனர்.

லோன் செயலி மூலம் புது மோசடி!

நாம் சம்பாதித்து சேமித்து வைத்த பணத்தை ஒரு கும்பல் திருடிச் செல்கிறது என்றால், மற்றொரு புறம் பணத் தேவை இருப்பவர்களுக்கு வலை விரித்து அவர்களிடமிருந்து கந்து வட்டி கறக்கும் மோசடி கும்பல் ஒன்று கிளம்பியுள்ளது. ஜனவரி முதல் வாரம் சென்னை காவல்துறையனரால் அந்த கும்பல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இவற்றில் சீன நிறுவனங்கள்தான் பெரும்பாலும் ஈடுபடுகின்றன.

வங்கி சேவைகளை அளிக்கும் தனியார் நிதி நிறுவனங்களுக்கு சில ஆண்டுகளுக்கு முன்பு அதிக அளவில் உரிமங்கள் வழங்கப்பட்டன. இவ்வாறு உரிமம் பெற்ற பல நிறுவனங்கள் தற்போது செயல்படவில்லை. இவ்வாறு செயல்படாத நிறுவனங்களை சீன நாட்டினர் கண்டுபிடித்து, இந்தியாவை சேர்ந்தவர்களை வைத்து, பினாமி பெயர்களில் அந்த நிறுவனங்களை வாங்கி, கடன் கொடுக்கும் செயலி நிறுவனங்களாக மாற்றியுள்ளனர்.

தென் இந்தியாவில் மட்டும் கடன் செயலிகளில் சுமார் 300 கோடி ரூபாய்க்கு சீன நிறுவனங்கள் முதலீடு செய்திருப்பது விசாரணையில் தெரியவந்துள்ளது. இது குறித்து தற்போது தான் அமலாக்கத்துறை விசாரணை நடத்தி வருகிறது. ஆர்.பி.ஐ., இந்த கடன் செயலிகள் குறித்து எச்சரித்துள்ளது. சட்டத்தில் உள்ள ஓட்டைகளை பயன்படுத்தி இவர்கள் இங்கு கந்து வட்டி வசூலிக்கின்றனர்.

அவசரத்திற்கு இவர்களிடம் செயலி மூலம் ரூ.5000 கடன் பெற்றால், ரூ.1,500 பிடித்துக்கொண்டு தருவார்கள். அந்த கடனை ஒரு மாதத்திற்குள் திருப்பிச் செலுத்த வேண்டும். இல்லை என்றால் அதற்கு 30%-க்கு மேல் வட்டி. அப்படியும் செலுத்தவில்லை என்றால், நாம் பயன்படுத்திய செயலி மூலம் நமது அலைபேசியில்

உள்ள தொடர்பு எண்களை திருடி அவர்களுக்கு எல்லாம் போன் செய்து நம்மை பற்றி தகாத முறையில் அவதூறு பரப்புவார்கள். சமூக ஊடகங்களில் நம் புகைப்படத்தை போட்டு மோசடிக் காரன் என்று பரப்புவார்கள்.

இது போன்ற செயல்களால் தெலுங்கானாவில் 10-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். டிசம்பர் மாதம் செங்கல்பட்டில் ஒரு இளைஞர் இந்த கடன் செயலி தந்த நெருக்கடி மற்றும் ஏற்படுத்திய அவமானத்தால் கிணற்றில் குதித்து தற்கொலை செய்து கொண்டார். எனவே எளிதாக கடன் கிடைக்கிறது என்று மொபைல் செயலிகளை பயன்படுத்துவதும் பெரும் ஆபத்து என்பதை உணருங்கள்.

பணத்தை பாதுகாப்பது எப்படி?

வங்கியிலிருந்து பேசுகிறேன் என்று கூறினாலே உஷாராகி விடுங்கள். கார்டு எண் போன்றவை கேட்டால் உடனே தொடர்பை துண்டியுங்கள். முடிந்தால் அந்த எண் குறித்து காவல் நிலையத்தில் புகார் அளியுங்கள்.

உங்களது ஏ.டி.எம்., கடவுச்சொல், கிரெடிட் கார்டு தகவல்கள், நெட் பேங்கிங் கடவுச் சொல் போன்ற வற்றை ஒரு போதும் மொபைல் போனிலோ அல்லது இமெயிலிலோ சேமித்து வைக்காதீர்கள். குறிப்பிட்ட நாட்களுக்கு ஒரு முறை உங்கள் ஏ.டி.எம்., கடவுச்சொல் உள்ளிட்ட அனைத்தையும் மாற்றிக்கொண்டே இருங்கள்.

நெட் பேங்கிங் பயன்படுத்தும் போது வங்கியின் அதிகாரப்பூர்வ பக்கத்தில் தரப்பட்டிருக்கும் இணைய முகவரியையே பயன்படுத்துங்கள். அலுவலக கணினி, பொதுக் கணினிகளில் பயன்படுத்தாதீர்கள். வங்கி இணைய முகவரிக்கு முன் https என்று உள்ளதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். இதில் S என்பது இணையம் பாதுகாப்பானது என்பதை குறிக்கும்.

உங்களது மொபைல் எண் மற்றும் இமெயில் முகவரியை வங்கியில் பதிந்து கொள்ளுங்கள். இதன் மூலம் அதிகாரப்பூர்வ தகவல்களை உடனடியாக பெறலாம். நீங்கள் செய்யாத ஒரு பரிமாற்றத்துக்கு பணம் எடுக்கப்பட்டிருந்தால் வங்கியின் கவனத்திற்கு உடனடியாக தெரியப்படுத்துங்கள்.

உங்களது ஏ.டி.எம்., கடவுச்சொல், கிரெடிட் கார்டு தகவல்கள், நெட் பேங்கிங் கடவுச் சொல் போன்ற வற்றை ஒரு போதும் மொபைல் போனிலோ அல்லது இமெயிலிலோ சேமித்து வைக்காதீர்கள். குறிப்பிட்ட நாட்களுக்கு ஒரு முறை உங்கள் ஏ.டி. எம்., கடவுச்சொல் உள்ளிட்ட அனைத்தையும் மாற்றிக்கொண்டே இருங்கள்.

ஏ.டி.எம்.,ல் பணம் எடுக்க தெரியவில்லை என்றால், தெரியாத நபரிடம் கொடுத்து பணம் எடுத்துத் தர சொல்லாதீர்கள். உங்கள் வீட்டிலிருக்கும் நபரையே அழைத்துச் செல்லுங்கள். மிக அவசரம் என்றால் வங்கி ஊழியர்களின் உதவியை நாடலாம். எப்போதும் வங்கி முகப்பில் இருக்கும் ஏ.டி.எம்., அல்லது கூட்டம் நிறைந்த மார்க்கெட் பகுதிகளில் உள்ள ஏ.டி.எம்., பயன்படுத்துவது நல்லது. சில இடங்களில் அட்டையை நுழைக்கும் இடத்தில் ஸ்கிம்மர் கருவி பொருத்தி ஏ.டி.எம்., அட்டை தகவல்கள் திருடப் படுகின்றன.

பிலிப்கார்ட்டிலிருந்து பரிசு, அமேசானிலிருந்து அதிரடி விலை குறைப்பு என்றவாறு ஆசையை தூண்டும் வகையில் அனுப்பப்படும் லிங்குகளை அப்படியே ஸ்பாம் லிஸ்டில் சேர்த்துவிடுங்கள். சதுரங்க வேட்டை படத்தில் சொல்லப்படும் பிரபலமான வசனத்தை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். ‘ஒருத்தரை ஏமாத்தனும்னா அவங்களோட ஆசையை தூண்டனும்’. எனவே மிகவும் விழிப்புடன் இருப்பது பாதுகாப்பு.





ஜொஹனஸ் கெப்ளர்

சுஜாதா நடராஜன்

ஜொஹனஸ் கெப்ளர் வாழ்ந்த பதினாறாம் நூற்றாண்டில் வானியலுக்கும்(*astronomy*) நிரூபனங்கள் அற்ற சோதிடத்துக்கும் பெரிய வித்தியாசம் ஒன்றும் இல்லை. இன்றிருக்கும் வானியல் முன்னேற்றங்கள் எதுவும் அப்போது இல்லை. இன்னும் சொல்லப்போனால் அப்போது இருந்த வானியல் என்பது இயற்கை அறிவியல், சமூக அறிவியல், கலைகள் மற்றும் கணிதத்துடன் கூடிய ஒரு பிரிவாகவே இருந்தது.

ஆனால் இயற்பியல் என்பது தனிப்பெரும் பிரிவாக, “இயற்கை மெய்யியலின்” (*Natural Philosophy*) ஒரு பகுதியாகவே இருந்தது. இந்த நிலையில், பதினாறாம் நூற்றாண்டில் “கோள்கள் சூரியனை நீள்வட்ட பாதையில் சுற்றுகின்றன!” என்று கண்டுபிடித்து மிகப்பெரிய அறிவியல் புரட்சிக்கு வித்திட்ட ஜொஹனஸ் கெப்ளர், இயற்பியலையும் வானியலையும் ஒன்றிணைத்து “விண் இயற்பியல்” (*Celestial Physics*) என்ற புதுப்பிரிவை உருவாக்கினார். அதுவே இன்றைய வானியல்.

*1571*ஆம் ஆண்டு டிசம்பர் *27*ம் தேதி ஜெர்மனியில் பிறந்த, ஜொஹனஸ் கெப்ளர் ஒரு வானவியலாளர், கணிதவியலாளர் மற்றும் சோதிடர். “சேர்ந்தே இருப்பது வறுமையம் புலமையும்” என்பது போல இளமையிலேயே வறுமையின் பிடியில் சிக்கித் தவித்த கெப்ளர், தட்டுத் தடுமாறி, உதவித்தொகையில் படித்தவர். அந்த காலத்தில் வான்வெளி கையேடு என்பது கோப்பர் நிக்கஸின் புத்தகங்களே! கணித ஆசிரியராக வேலை பார்த்துக் கொண்டிருக்கும் போதே, கோப்பர் நிக்கஸின் புத்தகங்களால் ஈர்க்கப்பட்டவர் கெப்ளர். கோப்பர் நிக்கஸோ, தன்னுடைய சூரிய மைய (*Heliocentric*) கருத்துகளுக்காக மதரீதியாக கடுமையான கண்டனங்களுக்கு உள்ளாக்கப் பட்டவர். இந்நிலையில் *1596* ஆம் ஆண்டு, கோப்பர் நிக்கஸின் சூரிய மைய கருத்துகளுக்கு ஆதரவாக தன் கருத்துக்களை “பிரபஞ்ச வரைபட மர்மங்கள்” (*Mysterium Cosmographicum*) என்ற தன் புத்தகத்தில் கெப்ளர் தெரிவித்திருந்தார். அப்போது இது ஒரு மிகப்பெரிய புரட்சி, ஏற்கனவே திருச்சபையால் கண்டனத்துக்குள்ளாக்கப்பட்ட, கோப்பர் நிக்கஸின் சூரிய மைய கருத்துக்கு ஆதரவு அளிப்பதால், தானும் எதிர்ப்புக்கு உள்ளாவோம் என்று உணர்ந்திருந்த கெப்ளர், தன் கருத்துக்களை மதரீதியாக பதிவு செய்தார்.

“கிறித்துவத்தின், இறை நம்பிக்கையின் மையமாக தேவகுமாரன் இருப்பது இருப்பது போல, சூரியன் இந்த பிரபஞ்சத்தின் மையமாக இருக்கிறது” என்று சூரிய மைய கருத்தை அழுத்தம் திருத்தமாக வெளியிட்டார். மதத்துக்கு முக்கியத்துவம் கொடுத்த கருத்தாக அது தெரிந்ததாலோ என்னவோ மத உணர்வாளர்கள் பெரிதாக இதை கண்டுகொள்ள வில்லை.

அந்த காலகட்டத்தில், எந்த பிரச்சனையும் வந்துவிடக் கூடாது என்று கெப்ளரும் அவர் மனைவியும் கடிதங்களை கூட குறியீட்டு முறையில் எழுதிக் கொண்டிருந்தார்கள் என்பது கூட கேள்வி.

இதன் பின் கோள்களின் இயக்கம் மற்றும் வேறு சில வானியல் ஆராய்ச்சியில் ஈடுபட விரும்பிய கெப்ளர், தன்னுடைய ஆராய்ச்சி குறிப்புகளையும் கருத்துக்களையும் பல்வேறு வானியலாளர்களுக்கு அனுப்பி வைத்தார். இந்த தருணத்தில் தான் அவர் வாழ்வின் மிக முக்கியமான மனிதரை அவர் சந்திக்க நேர்ந்தது. அவர் டைகோ ப்ராஹி. டென்மார்க்கின் மிகப்பெரிய பணக்கார குடும்பத்தில் பிறந்த டைகோ ப்ராஹி வானவியலில் தீராததாகம் கொண்டிருந்தவர். தன் வாழ்நாள் முழுவதும் வான்வெளியில் இருக்கும் நட்சத்திரங்கள் கோள்களின் அசைவை கவனித்து அதன் விவரங்களை பதிவு செய்து கொண்டிருந்தவர். அவர் வாழ்ந்த காலத்தில் அவர் பதிவு செய்த விவரங்கள் மிகத் துல்லியமானவை.

அந்த தரவுகளுடன் வான் வெளியை ஆராய்ந்து கொண்டிருந்த அவர், அந்த தரவுகளை யாரிடமும் பகிர்ந்து கொள்ள விரும்பவில்லை. கெப்ளரை பொறுத்தவரை மிக புத்திசாலியான, மெய்யியல் அறிவுடன் கருத்தியல்களை உருவாக்க வல்ல அறிவுடையவராக இருந்தாலும் அவரிடம் வானவியல் இயக்கங்களை பற்றிய தரவுகள் இல்லை. அந்த தரவுகளுக்காகவே தன்னை விட இருபத்தைந்து வயது பெரியவரான டைகோ ப்ராஹியிடம் உதவியாளராராக சேர்ந்தார். அந்த காலத்தில் செவ்வாய் கிரகத்தின் இயக்கம் மிகப்பெரும் அவிழ்க்க முடியாத மர்மமாக இருந்தது,. ஏனென்றால் வருடத்தில் சில மாதங்கள் அது பின்னோக்கி நகர்ந்தது (*retrogate motion*). சூரியனை சுற்றி தான் கோள்கள் நகர்கின்றன என்று கண்டுபிடித்த கோப்பர் நிக்கஸால் கூட செவ்வாயின் பின்னோக்கிய நகர்வுக்கு தீர்வு சொல்ல இயலவில்லை. இதை கண்டறிவதற்காக தான் டைகோ, கெப்ளரை நியமித்திருந்தார். இருப்பினும் டைகோ அத்தனை சுலபமாக தன்னிடம் இருக்கும் வானியல் இயக்க விவரங்களை கெப்ளரிடம் பகிர்ந்து கொள்ளவில்லை. இன்னும் சொல்லப்போனால் அவர் தன்னிடம் உதவியாளாரக இருந்த கெப்ளரை நாய் போல் நடத்தினார் என்று இருவரை பற்றியும் புத்தகமே எழுதி இருக்கிறார்கள் (*The noble man and the housedog*). கெப்ளர் அந்த தரவுகளுக்காகவே அவமானளை பொறுத்துக் கொண்டு இருந்திருக்கின்றார். ஆனால் பாருங்கள் 1601 இல் டைகோ மர்மமான முறையில் இறக்கும் வரை அவர் எந்த தரவுகளையும் கெப்ளரிடம் பகிர்ந்து கொள்ள வில்லை. அதன் பின்னரே அந்த தரவுகள் கெப்ளரிடம் வந்து சேர்ந்தன. டைகோவின் குடும்பம் அவற்றை வெளியில் விற்க முயன்றபோதும், அவர்களிடம் இருந்து கெப்ளர் வலுக்கட்டாயமாக எடுத்துகொண்டார் என்பது சொல்லப்படுகிறது.

ஏற்கனவே திருச்சபையால் கண்டனத்துக்குள்ளாக் கப்பட்ட, கோப்பர் நிக்கஸின் சூரிய மைய கருத்துக்கு ஆதரவு அளிப்பதால், தானும் எதிர்ப்புக்கு உள்ளாவோம் என்று உணர்ந்திருந்த கெப்ளர், தன் கருத்துக்களை மதரீதியாக பதிவு செய்தார்.

டைகோவின் தரவுகள் கைக்கு கிடைத்தப் பின்னர், “எட்டே நாட்களில் கண்டுபிடித்துவிடுவேன்” என்று சவால்விட்ட கெப்ளரால், எட்டு வருடங்களுக்கு பிறகே செவ்வாயின் பின்னோக்கிய நகர்வுக்கு காரணம் கண்டுபிடிக்க முடிந்தது. அதாவது கோள்கள் சூரியனை சுற்றி வட்டப்பாதையில் சுற்றவில்லை, நீள்வட்ட பாதையில் சுற்றுகின்றன என்பதை கண்டறிந்தார். அதுவே கெப்ளரின் முதல் கோள் இயக்க விதி.

இதன் மூலம் செவ்வாயின் பின்னோக்கிய நகர்வுக்கான காரணமும் தெரிந்தது. பூமி சுற்றும் பாதை ஓரளவுக்கு வட்டமாக இருந்தாலும், அதை அடுத்த செவ்வாய் கிரகம் சுற்றும் பாதை நன்றாக இழுக்கபட்ட நீள்வட்ட பாதை, பூமி அதன் உள் வட்ட சிறிய பாதையில் சுற்றும் போது, செவ்வாய் கிரகம் பின்னோக்கி போவது போலவே தெரியும்.



இரண்டாவதாக ஒவ்வொரு கோளின் வேகமும் கெப்ளருக்கு தேவைப்பட்டது. சூரியனுக்கும் கோள்களுக்கும் இடையில் இருக்கும் தூரத்துக்கும் கோள்களின் வேகத்துக்கும் சம்மந்தம் இருப்பதாக அவர் உணர்ந்த போது கெப்ளரின் இரண்டாம் கோள் இயக்க விதி உருவாகியது. "சூரியனுக்கும் கோள்களுக்கும் இடையே கண்ணுக்கு தெரியாத ஒரு கோடு, சமகால அளவுகளில் சம பரப்பளவுகளை அலகிடுகிறது" என்பதே அது. அந்த கண்ணுக்கு தெரியாத கோடு என்று அவர் கூறியது தான் பின்னாளில் நியூட்டன் கிராவிட்டியை கண்டறிவதற்கான குறிப்பை அளித்தது. பொதுவாக சொல்லப்படுவது போல ஆப்பிள் தலையில் விழுந்தது காரணம் அல்ல.

அதற்கு பின் மூன்றாவது விதியை கிட்டதட்ட பத்து வருடங்களுக்கு பின்பு தான் கண்டுபிடித்தார். கோள்கள் சூரியனை சுற்றி வரும் நேரத்துக்கும் சூரியனுக்கும் கோள்களுக்கும் இடையே உள்ள தூரத்துக்கும் உள்ள தொடர்பை விவரித்த விதி அது.

கெப்ளரின் இந்த மூன்று விதிகளும் பதினேழாம் நூற்றாண்டில் வானவியலில் மிகப்பெரும் புரட்சியை ஏற்படுத்தியது என்றால் அது மிகையாகாது. அதன் பின்பே கோள்களை பற்றிய தெளிவான உண்மை புலப்பட்டது. அவற்றின் பாதைகள் தெளிவாக வரையறுக்கப்பட்டன. அதன் பின் அவரால் இறந்தகாலத்திலும் எதிர்காலத்திலும் கோள்களின் இருப்பிடத்தை கணக்கிட முடிந்தது. எதிர்காலத்தில் நடைபெற இருக்கும் புதன் மற்றும் சுக்கிரனின் மிகப்பெரும்இடப்பெயர்வுகளையும் கணக்கிட்டார். ஆனால், அதை காண அவர் உயிரோடு இல்லை.

கோள்களின் இயக்கவிதிகள் மட்டுமல்லாது குறிப்பிடத்தக்க நிறைய கண்டுபிடிப்புகளை கெப்ளர் அளித்துள்ளார். ஒளிவிலகலே கண்பார்வைக்கு காரணம் என்று கண்டறிந்து கிட்டப்பார்வை தூரப்பார்வைக்கு கண்கண்ணாடிகள் தயாரித்தார். இதையெல்லாம் தாண்டி கிராவிட்டி எனும் ஈர்ப்புவிசையை பற்றிய புரிதலுக்கு அடித்தளம் போட்டவர் அவர்தான். ஈர்ப்புவிசை என்பது இரண்டு பொருட்களுக்கு இடையே நிகழும் ஒன்று என்றும், கடலின் அலைகளுக்கு நிலவே காரணம் என்றும், பூமியின் ஈர்ப்புவிசை இல்லையென்றால், பூமியின் நீரெல்லாம் நிலவைத்தாண்டி எங்கேயோ போய்கொண்டிருக்கும் என்று வேடிக்கையாக குறிப்பிட்டவர் அவர். "சாட்டிலைட்" என்று முதன்முதலாக பெயரிட்டதும் கிறிஸ்து பிறந்த வருடத்தை கணக்கிட்டவரும் இவரே.

இவ்வாறு அறிவியலில் பல சாதனைகள் படைத்த கெப்ளரின் வாழ்கையிலும் மர்மம் ஒன்று உண்டு. அது அவரது முதலாளியான டைகோ பிராஹியின் திடீர் மரணம். 1601 இல் இறந்த டைகோவின் கல்லறையை, கிட்டதட்ட 300 வருடங்களுக்கு பிறகு, 1910 இல் அவரின் மர்ம மரணத்தின் காரணத்தை கண்டுப்பிடிப்பதற்காக தோண்டி எடுத்த விஞ்ஞானிகள் அவர் உடலில் பாதரசத்தின் சுவடுகள் இருப்பதை கண்டு பிடித்தார்கள். அதனால் விஷம் கொடுக்கப்பட்டு இறந்திருக்கலாம் என்று கணித்தார்கள். அரசல் புரசலாக அவர் மரணத்தை கெப்ளருடன் கூட இணைத்து பேச்சுகள் அடிப்பட்டன. அப்போது கெப்ளரும் உயிரோடு இல்லை. 1630 ஆம் வருடமே, ரீகன்ஸ்பெர்க்கில் தன்னுடைய 59வது வயதில் கெப்ளர் மறைந்துவிட்டார். மூன்றாண்டுகளிலேயே ஐரோப்பாவில் அப்போது நடந்து கொண்டிருந்த மதப்போரினால் அவர் கல்லறை உடைக்கப்பட்டது. இருப்பினும் அவர் மனிதக்குலத்துக்கு செய்த நன்மைகளால் இன்றளவும் அவர் பெயர் நிலைத்து நிற்கிறது.

உனது பையில் ஒரு கூழாங்கல்

திக் நாட் ஹான்

புத்தர் என்பவர் யார்?

சில ஆண்டுகளுக்கு முன் இந்தியாவிலுள்ள உருவேலா கிராமத்திற்குச் சென்றிருந்தேன். ”சுமார் இரண்டாயிரத்து அறுநூறு ஆண்டுகளுக்கு முன் சித்தார்த்தர் இக்கிராமத்தின் அருகே வாழ்ந்தார். அவர்தான் பின்னர் புத்தரானார். ஏறக்குறைய அப்போதிருந்த மாதிரிதான் இக்கிராமம் இப்போதும் காட்சியளிக்கிறது. அங்கே பெரிய கட்டிடங்களோ வர்த்தக அங்காடிகளோ பெருநெடுஞ் சாலைகளோ இல்லை. அது ரம்மியமாக இருந்தது. சித்தார்த்தர் அங்கே வாழ்ந்தபோது அக்கிராமத்துச் சிறுவர்கள் அவருடன் நட்பு பாராட்டி உணவும், சின்னச்சின்னப் பரிசுகளும் தந்தனர். அக்கிராமத்தின் அருகே ஓடும் நதியில் சித்தார்த்தர் குளித்தார். குசா எனும் புல்வகை அங்கே இன்னமும் காணப்படுகிறது. அப்புல்லைத்தான் சித்தார்த்தர் அமருவதற்கான மெத்தையாக ஒரு சிறுவன் அவருக்குப் பரிசாகக் கொடுத்தான். அந்த நதியோரம் வளர்ந்திருந்த புற்களைக் கொஞ்சம் வெட்டி எனது வீட்டிற்கு எடுத்துச் சென்றேன். அந்நதியின் அடுத்த கரையில் ஒரு காடு இருக்கிறது. அங்கே உள்ள போதி மரத்தினடியில் தான் சித்தார்த்தர் தியானித்தார். அம்மரத்தினடியில்தான் புத்தரானார்.

தன்னுள் விழிப்படைந்த எவரும் புத்தர்தான். தன்னைச் சுற்றியும் தன் உள்ளும் நிகழும் யாவற்றையும் அறிந்தவரும் ஆழமான அன்பும் புரிந்துணர்வும் கொண்டவர் புத்தராவார். முற்றிலும் விழிப்புற்ற சித்தார்த்தர் தான் புத்தர். அப்புத்தரையே நமது ஆசானாக ஏற்று இருக்கிறோம். விழிப்புக்கான விதை நம்முள் உள்ளது. நாம் எதிர்கால புத்தர்களென அவர் கூறியுள்ளார்.

தனது சிறு வயதில், எனது மாணவன் ஒருவன் 'யாரந்த புத்தர்'? என்ற கேள்விக்கு ஆட்பட்டான். அவனது பெயர் ஹியு. அவனது ஆறாம் வயதில் தனது பெற்றோரிடம் தான் ஒரு பிக்குவாக முடியுமா என்று கேட்டான். புத்தகோவிலுக்குச் செல்வதில் அவனுக்குப் பிரியம் அதிகம். பௌர்ணமி, அமாவாசை அன்று அங்கு தன் பெற்றோருடன் சென்று மலர்கள், மாங்கனிகள், வாழைப் பழங்கள், இன்னும் சில வினோதமான உள்ளூர் பழங்களைப் புத்தருக்கு ஆசையோடு படைத்தான்.

அக்கோவிலில் ஹியு கனிவோடு நடத்தப்பட்டான். அங்கு வருபவர்களும் அவனிடம் இயல்போடும் நட்போடும் நடந்து கொண்டனர். தலைமை பிக்குவிற்கு அவனைப் பிடித்திருந்தது என்று ஹியு அறிந்திருந்தான். ஒவ்வொரு முறை அவன் கோவிலுக்கு வரும் போதும் வாழைப்பழமோ மாங்கனியோ அவனுக்குக் கொடுத்தார். அதனாலேயே அக்கோவிலுக்குப் போவதை ஹியு மிகவும் விரும்பினான். ஒருநாள் அவன் “அம்மா நான் பிக்குவாகி இக்கோவிலில் வசிக்க விரும்புகிறேன்” என்றான். அவனுக்கு வாழைப்பழம் உண்ணப் பிடிக்கும் என்பதால் பிக்குவாக விரும்பினான் போலும்!

அவனை குறை சொல்லக்கூடாது. வியட்நாமில் பலவகை வாழைப்பழங்கள் மிக ருசியோடிருக்கும். வயதில் மிகச்சிறியவன் என்றாலும் அவனது பெற்றோர்கள் அவனை அக்கோவிலுக்கு மாணவனாக அனுப்ப முடிவு செய்தனர். தலைமை பிக்கு அவனுக்கொரு

பழுப்பு நிற சிறு அங்கியை அணியச் செய்தார். அவ்வழகிய அங்கியில் அவன் ஒரு குட்டி பிக்குவாகத் தென்பட்டான். அவன் பிக்குவான புதிதில் புத்தருக்கு வாழைப்பழம், மாம்பழம் கொண்டு வந்து படைத்ததால் அவருக்கு அப்பழங்கள் மிகவும் பிடிக்குமென்று கருதினான். அவனுடைய சிறுமூளைக்கு அவ்வளவுதான் அப்போது புரிந்தது.

ஒரு நாள் மாலையில் எல்லா பார்வையாளர்களும் கோவிலை விட்டு வீட்டிற்குப் போகும் வரையில் காத்திருந்தான். புத்தர் சிலையுள்ள அறையின் கதவருகே அமைதியாக நின்றான். யாரும் அங்கில்லை என்று உறுதி செய்த பின் அந்த புத்தரின் அறைக்குள் எட்டிப் பார்த்தான். அப்புத்தர் சிலை நிஜ மனித உருவில் இருந்தது. அச்சிறுவனின் மனதில் அச்சிலை தான் புத்தரென நம்பியது.

நாள் முழுதும் அயர்வின்றி அமர்ந்திருக்கும் புத்தர், அந்த அறை காலியானதும் பழங்களை எடுத்துக் கொள்வார் எனக் கற்பனை கொண்டிருந்தான். தன் முன் வைக்கப்பட்டிருந்த வாழைக்குலையிலிருந்து ஒரு பழத்தையேனும் எடுப்பார் என்று எதிர்பார்த்து அவரையே கண்காணித்து வந்தான். அவனுக்கு குழப்பமாயிருந்தது. மக்கள் கொண்டு வந்து படைத்த ஒரு வாழைப்பழத்தைக் கூட புத்தர் எடுத்து சுவைக்காதது ஏனென்று அவனுக்குப் புரியவில்லை.

மூத்த தலைமை பிக்குவிடம் இது பற்றி கேட்க அவனுக்குத் தைரியமில்லை. தன்னை முட்டாளென நினைத்து விடுவாரோ எனப் பயந்தான். நாம்கூட பொதுவாக பல சமயங்களில் நம்மை யாரேனும் முட்டாளென நினைத்து விடுவாரோ என்றெண்ணி கேள்வி கேட்பதில்லை. ஹியுவும் அப்படி பயந்தான். எனவே விடை தெரியாமல் குழம்பினான். நானாயிருந்தால் வேறு யாரையாவது கேட்டுத் தெரிந்து கொள்வேன். ஹியு யாரையும் கேட்கவில்லை.

அவன் இளைஞன் ஆனதும் புத்தர் சிலை நிஜ புத்தரில்லை என்பது புரிந்தது. எத்தனை பெரிய சாதனை? அப்புரிந்துணர்வு அவனுக்கு மகிழ்ச்சி அளித்தது. ஆனால் ஒரு புதிய கேள்வி எழுந்தது. ‘புத்தர் இங்கில்லை என்றால், வேறெங்கு இருக்கிறார்? புத்தர் கோவிலில் இல்லாவிட்டால், வேறெங்கு இருக்கிறார்? தினமும் கோவிலுக்கு வரும் மக்கள் புத்தர் சிலையை வணங்கினர். ஆனால் புத்தர் எங்கே போனார்?’

வியட்நாமில், தூய நில பவுத்தத்தைப் பழகும் மக்கள், மேற்கு திசையில் உள்ள தூய நிலத்தில் தான் புத்தர் வசிக்கிறார் என நம்புகின்றனர். ஒருநாள் அத்தூய நிலமே புத்தரின் வீடென்று யாரோ கூறியது காதில் விழுந்தது. அதை நம்பிய ஹியு மிகவும் துயரம் அடைந்தான். புத்தர் ஏன் மக்களை விட்டு வெகுதொலைவு தள்ளி வசிக்கவேண்டும் என்று கவலையோடு சிந்தித்தான். இது இன்னொரு கேள்வியைக் கொண்டுவந்தது.

ஹியுவை அவனுடைய பதினான்காம் வயதில் சந்தித்தேன். புத்தரைப்பற்றி அப்போதும் அவன் அப்படியே சிந்தித்துக் கொண்டிருந்தான். புத்தர் நம்மை விட்டு வெகுதூரத்தில் இல்லை என்பதை அவனுக்கு எடுத்துரைத்தேன். புத்தர் நம் ஒவ்வொருவருக்குள்ளும் இருக்கிறார் என எடுத்துக் கூறினேன். புத்தனாக இருப்பது என்பது ஒவ்வொரு கணமும் நமக்குள்ளேயும் நம்மைச் சுற்றியும் நிகழ்வதில் விழிப்புடன் இருப்பதாகும். புத்தர் என்பது நமது இதயத்தில் வைத்திருக்கும் அன்பும், புரிந்துணர்வும் ஆகும். இது ஹியுவிற்கு பெருமகிழ்ச்சி அளித்தது.

ஹியு வளர்ந்து பெரியவனானதும் வியட்நாமில் உள்ள சமூகசேவை மையம் ஒன்றின் இயக்குனர் ஆனான். இளம் கன்னியர்களுக்கும் பிக்குகளுக்கும் இளைஞர்களுக்கும் யுவதிகளுக்கும் பயிற்சி அளித்தான். வியட்நாம் போரில் குண்டுகளால் தகர்க்கப்பட்ட மக்களின் வீடுகளைப் புனரமைக்கப் பயிற்றுவித்தான்.

அன்பும், புரிந்துணர்வும் எங்கு காணப்படுகிறதோ அங்கே புத்தர் இருக்கிறார். புத்தர் என்பது ஒரு சிலையோ தலையில் அலங்கார ஒளிவட்டம் கொண்ட ஒருவர் என்றோ, மஞ்சள் துவராடை அணிந்த ஒருவரென்றோ கற்பனை செய்து கொள்ளாதீர்கள். புத்தர் என்பவர் தன்னுள்ளும் புறமும் என்ன நிகழ்கிறது என்ற விழிப்புணர்வுடன் இருப்பவராவார். அவர் மேலான புரிந்துணர்வும் கருணையும் கொண்டிருப்பார். ஆணோ பெண்ணோ இளையவரோ மூத்தவரோ புத்தவரென்பவர் எப்போதும் மிக இனிமையாகவும் புத்துணர்வோடும் இருப்பார்.



(தமிழில்: வி. அமலன் ஸ்டேன்லி)

பேருந்துக்கு காத்திருக்கும் போதும் விளையாடலாம்!

தமிழினி

பஸ் வர ரொம்ப லேட்டாகுதா...

'பேருந்தில் செல்வது உங்களுக்குப் பிடிக்குமா?'

எனக்கும் ரொம்பவே பிடிக்கும். அதுவும் ஜன்னலோரமாக உட்கார்ந்து, வெளியே வேடிக்கை பார்த்துக்கொண்டே போனால் பேருந்திலிருந்து இறங்கவே வேண்டாம் என்று தோன்றும். விதவிதமான பேருந்து டிக்கெட்டுகளைச் சேகரிப்பது என் பழக்கம். சிலர் ஸ்டாம்ப் சேகரிப்பார்களே அதுபோல. நீலம், மஞ்சள், வெள்ளை எனப் பல வண்ணங்களில் பேருந்து டிக்கெட்டுகள் வைத்திருக்கிறேன்.

பேருந்தில் செல்வது பிடிக்கும். ஆனால், பேருந்துக்காகக் காத்திருப்பதுதான் போர் அடிக்கும். ஆமாம், அவசரம் அவசரமாகப் புறப்பட்டு வேகம் வேகமாக நடந்து வந்து பேருந்து நிறுத்தத்தில் நின்றால், சரியான நேரத்துக்கு வராது. முன்பெல்லாம் எனக்கு அதுமாதிரியான நேரங்களில் ரொம்ப எரிச்சலாக இருக்கும். ஆனால், இப்போது அப்படி இல்லை.

பேருந்துக்காகக் காத்திருக்கும் நேரங்களில் நானும் என் நண்பன் நந்தனும் ஜாலியான சில விளையாட்டுகளை விளையாடுவோம். அது என்னென்ன என்று உங்களுக்குச் சொல்லப்போகிறேன்.

நானும் நந்தனும் முதலில் என்ன செய்வோம் தெரியுமா? நாங்கள் செல்லும் இடத்திற்கு அழைத்துப்போகும் பேருந்து நிற்கும் இடம்தானா என்று ஒருமுறை செக் பண்ணிக்கொள்வோம். சில பேர் தவறான பேருந்து நிறுத்தத்தில் ரொம்ப காத்திருந்து நேரத்தை வீணடித்து விடுவார்கள். அப்படி நாங்களும் செய்துவிடக்கூடாது இல்லையா?

'எங்கிட்டு எங்கிட்டு... இங்கிட்டு இங்கிட்டு' இது ஒரு விளையாட்டு பெயர். அந்த இடத்தைச் சுற்றிப் பார்த்து, எங்காவது ஓரிடத்தில் எழுதியிருக்கும் ஒரு வார்த்தையை 'எங்கிட்டு எங்கிட்டு' எனப் பாடி, நான் நந்தனிடம் சொல்வேன். நான் பத்து எண்ணி முடிப்பதற்குள் அது எங்கே எழுதியிருக்கிறது என்று கண்டுபிடித்ததும் 'இங்கிட்டு இங்கிட்டு' என அந்த இடத்தைக் காட்ட வேண்டும். அதன்பிறகு அவன் சொல்வான். நான் கண்டுபிடிப்பேன்.

அந்த விளையாட்டு போர் அடித்தால், இன்னொரு விளையாட்டும் இருக்கிறது. அதாவது சுற்றியிருக்கும் கடைகளில் எண்ணிக்கொள்வோம். அதில் எந்தக் கடைக்கு முதலில் வந்து பொருள் வாங்குவார்கள் என்று ஆளுக்கொரு கடையைத் தேர்ந்தெடுப்போம். அந்தக் கடைக்கு எங்களின் பெயரைச் சூட்டுவோம். யாருடைய கடைக்கு முதலில் பொருள் வாங்க வருகிறார்கள், அதிக முறை பொருள் எந்தக் கடையில் வாங்குகிறார்கள் என்று எண்ணிக்கொள்வோம். அதில் யார் ஜெயிக்கிறார்கள் என்று போட்டிப் போட்டுக் கொள்வோம்.

சரி, சரி... இந்த விளையாட்டில் யார் ஜெயித்தால் என்ன... யார் தோற்றால் என்ன... என்று நினைக்கிறீர்களா? அதில்



தான் ஒரு முக்கியமான விஷயம் இருக்கிறது. அன்றைக்கு ஜெயிப்பவரே ஜன்னல் ஓரமாய் உட்கார வேண்டும். அப்படியென்றால், தினமும் நாமே ஜெயிக்க வேண்டும் என நினைப்போம் இல்லையா?

இன்னும் சில விஷயங்களும் இருக்கின்றன. எங்களிடம் *'Bus Wait NoteBook'* இருக்கிறது. அப்படி கடைகளில் விற்காது. எங்களின் ரஃப் நோட்டை அப்படி மாற்றிக்கொண்டோம். அதில் என்ன எழுதுவோம் தெரியுமா?

பேருந்து நிறுத்தத்தில் எத்தனை கடைகள் இருக்கின்றன... பேருந்தில் செல்பவர்களைத் தவிர வேறு யார் யாரெல்லாம் அங்கே வருகிறார்கள் என்றும் எழுதுவோம். வேறு யார் வரப்போகிறார்கள் என்றுதானே நினைக்கிறீர்கள்? நிறைய பேர் வருவார்கள்.

பேருந்து ஏற்றிவிடுவதற்காகவே சிலர் வருவார்கள். பேருந்தில் வருபவர்களை அழைத்துச் செல்வதற்காகச் சிலர் வருவார்கள். சில பேர் வெய்யில் அதிகமாக இருக்கிறது என்று நிழலுக்காக ஒதுங்கி உட்கார்வார்கள். வெய்யில் வெப்பம் தாங்க முடியாமல் ஆடு, மாடு, நாய் எல்லாம் வரும். அதையெல்லாம் எழுதுவோம்.

அப்படி எழுதும்போது சில கேள்விகள் வரும். அதையும் அப்படியே எழுதி வைப்போம். என்ன கேள்விகள் தெரியுமா?

"தள்ளுவண்டியில் பழம் விற்கும் அண்ணன், திடீர்னு மழை வந்துவிட்டால் எங்கே போவார்?'

'வண்டி ரிப்பேர் என டு விலரைத் தள்ளிக்கொண்டே செல்வார்கள். எங்கே இருக்கு ரிப்பேர் ஷாப்?'

'பூ விற்கும் அர்ச்சனா அக்கா (ஒருநாள் அவரிடம் பெயர் கேட்டோம் சொன்னாங்க). அவசரமாக ஒன் பாத்ரூம் போக வேண்டும் என்றால் எங்கே போவார்?

இப்படி நிறைய கேள்விகள் எழுதி வைத்திருக்கிறோம்.

அப்புறம், ரொம்ப முக்கியமானது. மேலே சொன்னவற்றில் இல்லாமலும் சில பேர் வருவார்கள். மனநிலை சரியில்லாமல் ஒரு பெண் வருவார். ஆண்கள் போடும் சட்டையும் பேண்டும் அணிந்திருப்பார். இரண்டுமே பல இடங்களில் கிழிந்திருக்கும். பல நாட்களாகவே அந்தப் பகுதியிலேயே சுற்றிசுற்றி வருவார்.

சரி, இதெல்லாம் எதுக்கு எழுத வேண்டும்? நாங்களும் அப்படித்தான் நினைத்தோம். அதில் முக்கியமான ஒரு விஷயத்தை உங்களிடம் சொல்கிறேன். ஒருநாள், பேருந்து நிறுத்தத்தில் மனநிலை சரியில்லாத அந்தப் பெண்ணைக் காணவில்லை. எங்கோ போயிருப்பார் என நினைத்தோம். அடுத்த நாள், அதற்கு அடுத்த நாளும் அவரைப் பார்க்க முடியவில்லை. அதனால், என் அம்மாவிடம் அந்தப் பெண்ணைப் பற்றிச் சொல்லிக் கேட்டேன். என் அம்மா சொன்னதைக் கேட்டு பயங்கர ஷாக். என் அம்மா சொன்னதை அப்படியே அந்த நோட்டில் எழுதியிருக்கிறேன்.

'நீ பஸ் ஸ்டாப்ல பார்த்த மனநிலைசரியில்லாத அந்தப் பெண் பேரு பூர்ணிமா. எங்கூடத்தான் படிச்சா. நாங்க ரெண்டு பேரும் ஜாலியா ஊர் சுற்றியிருக்கோம். நிறைய விளையாடியிருக்கோம். அதோ சுவரில் இருக்கும் டிராயிங் பூர்ணிமா வரைஞ்சதுதான். ஒருநாள் திடீர்னு பூர்ணிமா வீட்டுல பெரிய சண்டை. அதுலேருந்து பூர்ணிமா அப்படி ஆயிட்டா. என்ன சண்டைன்னு நீ பெரியவளானதும் சொல்றேன். இப்போ பூர்ணிமாக்கு உடம்பு சரியில்லைன்னு ஹாஸ்பெட்டலுக்கு அழைச்சிட்டு போயிருக்காங்க'

இதுதான் அம்மா சொன்னது. இதை அடிக்கடி எடுத்துப் படிப்பேன். சில நாட்கள் கழித்து பூர்ணிமா அத்தை மறுபடியும் வந்துவிட்டார். இப்படி நிறைய விஷயங்கள் எங்களின் *'Bus Wait NoteBook'* -ல் எழுதி வைத்துள்ளோம்.

இப்படி நிறைய எழுதி வைத்திருக்கிறோம். சரி, 'இதை எதற்காக எங்களிடம் சொல்கிறாய்... நாங்களும் அப்படி எழுத வேண்டுமா?' என்று கேட்கிறீர்களா?

நாங்கள் செய்கிறோம் அவ்வளவுதான். உங்களுக்கும் எழுத தோன்றினால், செய்யுங்கள். விளையாட தோன்றினால் விளையாடுங்கள். கடைசியாக ஒன்று. எங்கள் நோட் புக்கில் அடிக்கடி எழுதும் ஒரு கேள்வி இருக்கிறது.

"ஏன் பஸ் லேட்டாவே வருது?' இந்தக் கேள்வியை நிறைய பேரிடம் கேட்டோம். ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாக பதில் சொல்கிறார்கள். சரி நீங்கள் சொல்லுங்கள்.

"ஏன் பஸ் லேட்டாவே வருது?'

●

ப்ரெமன் நகரத்து இசை ஞானிகள்

ஒருநாள் கழுதை ஒன்று, தன் எஜமானுக்காக, சோகமாகச் சோளப் பொதியைச் சுமந்து கொண்டு சென்றது. அதற்கு தினப்படி வேலை அதுதான். இப்போது அக்கழுதைக்கு வயதாகிவிட்டது. இப்போதெல்லாம் இதுபோன்ற கனமான சுமைகளை அக்கழுதையால் சுமக்க முடியவில்லை.

வயதாக ஆக, அக்கழுதைக்கு, பொதி சுமக்காவிட்டால், எங்கே தன் எஜமான் தன்னை வீட்டைவிட்டுத் துரத்திவிடுவாரோ என்று பயம் வந்துவிட்டது. அதனால் கழுதை அந்த வீட்டைவிட்டு வெளியே ஓடி வந்துவிட்டது. நான் அருகிலுள்ள பிரெமன் நகருக்குச் சென்று அந்த நகர இரவு விடுதிகளில் இசைக்கலைஞராக என் மீதமுள்ள வாழ்க்கையை ஓட்ட முடியும் என்று அந்தக் கழுதை தனக்குத்தானே சொல்லிக் கொண்டது.

கழுதை சாலையோரம் நடந்து சென்றது. அங்கே வழியில் ஒரு நாயைப் பார்த்தது. நாய் தட்டுத் தடுமாறி வந்து கொண்டிருந்தது. கழுதை நாயிடம் ஏன் இப்படி தள்ளாடுகிறாய் என்று கேட்டது? எனக்கு வயதாகி விட்டது, பலவீனமாக இருக்கிறேன் என்று நாய் சொன்னது. என்னை என் எஜமான் எந்த நேரத்திலும் வீட்டைவிட்டுத் துரத்திவிடுவார் என்ற பயத்தில் நான் ஓடிவந்துவிட்டேன் என்றது. அதற்கு கழுதை, ''ஓ அப்படியா? கவலைப்படவேண்டாம், நான் ப்ரெமன் நகரில் ஒரு இசைக்கலைஞனாக வாழப் போகிறேன், என்னுடன் வாருங்கள், வாழ்க்கையை ஒரு கை பார்க்கலாம்" என்றது. ''மிக்க மகிழ்ச்சி, நான் உங்களுடன் வருவேன்,'' என்றது நாய்.

அவர்கள் ப்ரெமனுக்குச் செல்லும் பாதையில் நடந்தார்கள். அவர்கள் வழியில் ஒரு பூனையைச்

சந்தித்தனர். அது அடைமழையில் அகப்பட்டதுபோல் மிகவும் சோகமாக இருந்தது. பூனையிடம் ஏன் இவ்வளவு வருத்தமாக இருக்கிறாய் என்று கழுதை கேட்டது. “எனக்கு வயதாகி விட்டது, என் பற்கள் கூர்மையாக இல்லை. நான் நெருப்பில் குளிர் காய விரும்புகிறேன். எனக்கு எலிகளை வெறுத்து விட்டது. எனவே என்னைக் காப்பாற்றிக் கொள்ள நான் வீட்டைவிட்டு வெளியேறி விட்டேன்'' என்றது பூனை. ஓ! அப்படியா? உங்களுக்குத் தான் நல்ல குரல் வளம் இருக்கிறதே, எங்களோடு பிரெமனுக்கு வாருங்கள் அங்கே இரவு விடுதிகளில் இசைக் கலைஞர்களாக வாழலாம்” என்று கழுதை கூறியது. பூனைக்கும் இந்த யோசனை பிடித்திருந்ததால், அவர்களுடன் சேர்ந்து கொண்டது.

விரைவில் அவர்கள் ஒரு பண்ணைக்கு வந்தார்கள். வேலியில் ஒருசேவல் நின்றது. கொக்கரகோ கோ என்று ஓங்கிய குரலெடுத்து அது கத்தியவுடன் இவர்கள் மூவரும் பயந்துவிட்டனர். ”ஏன் இப்படிப் பேய் மாதிரி கத்துகிறாய்?” என்று கழுதை கேட்டது. அதற்கு சேவல் சொன்னது, ‘‘நான் சோகமாக இருக்கிறேன், இந்த வீட்டு சமையலாள் என்னைக் கொன்று சூப் வைக்க நாள் பார்க்கிறான், நான் என்ன செய்ய முடியும்?” என்றது. “ஓ! உனக்காக மிகவும் வருந்துகிறேன், எங்களுடன் ப்ரெமன் வாருங்களேன், நாங்கள் அங்கே இரவு விடுதிகளில் இசைக்கலைஞர்களாகப் போகிறோம், உங்களுக்கும் நல்ல குரல் வளம் இருக்கிறது'' என்று கழுதை சொன்னது. ''ஓ, நல்ல யோசனைதான், நான் உங்களோடு வருவேன்” என்று சேவல் சொன்னது.

ப்ரெமன் வெகு தொலைவில் இருந்தது, நான்கு பேரும் சோர்வாக இருந்தனர். அவர்கள் இரவு அங்கேயே தங்கிவிட்டு காலையில் பயணத்தைத் தொடரலாம் என்று முடிவு செய்தனர். கழுதையும் நாயும் ஒரு மரத்தின் அடியில் படுத்துக் கொண்டன. பூனை மரத்திலுள்ள ஒரு கிளையில் ஏறிப்படுத்துக் கொண்டது. சேவல் மரத்தின் உச்சியில் பறந்து அமர்ந்து சுற்றிலும் பார்த்தது.

சேவல் தன் நண்பர்களை அழைத்து, ”நான் கொஞ்ச தூரத்தில் ஒரு வெளிச்சத்தைக் காண்கிறேன், அது ஒரு வீடாக இருக்க வேண்டும்” என்றது. ”ஓ! அப்படியானால் நாம் அங்கேயே சென்று தங்கலாமே'' என்று கழுதை கூறியதை அனைவரும் ஒத்துக்கொண்டனர். நாய், “அங்கே நாம் சாப்பிட கொஞ்சம் உணவுகூடக் கிடைக்கும்'' என்றது. நான்கு நண்பர்களும் அந்த வீட்டிற்குச் சென்றனர். வீட்டை அடைந்ததும், கழுதை, ‘‘நான் உயரமானவன், ஜன்னலின் வழியே எட்டி என்ன இருக்கிறதென்று பார்க்கிறேன்'' என்று சொல்லி எட்டிப் பார்த்தது.

"நீங்கள் என்ன பார்க்கிறீர்கள்?" - நாய் கேட்டது. ''நான் ஒரு மேஜையையும் சாப்பிட நல்ல உணவுப் பதார்த்தங்களையும் பார்க்கிறேன். வாசனை மூக்கைத் துளைக்கிறது, கொள்ளையர்கள் மேஜையைச் சுற்றி அமர்ந்திருக்கிறார்கள்'' என்று கழுதை கூறியது. ''அந்த உணவு நமக்குத் தேவையானது'' என்று சேவல் கூறியது. "ஆம், நீ சொல்வது சரிதான், ஆனால் முதலில் நாம் கொள்ளையர்களை அகற்ற வேண்டும்'' என்று கழுதை சொன்னது.

நான்கு நண்பர்களும் பேசி ஒரு திட்டம் வகுத்தார்கள். கழுதை தன் பின்னங்கால்களை ஊன்றி அமர்ந்தது, நாய் கழுதையின் முதுகில் குதித்து ஏறி அமர்ந்துகொண்டது, பூனை நாயின் முதுகில் ஏறிக்குதித்து அமர்ந்தது, பின்னர் சேவல் மேலே பறந்து பூனையின் தலையில் அமர்ந்தது.

அவர்கள் தங்கள் இசைக் கச்சேரியை ஆரம்பித்தனர்!

ப்ர்ர்ர்-ஹா, ப்ர்ர்ர்-ஹா என்று கழுதை கத்த ஆரம்பித்தது; வாவ் வாவ் வாவ் வாவ் என்று நாய் குரைக்க ஆரம்பித்தது, மியாவ் மியாவ் என்று இடையிடையே பூனை கோரஸ்

போட்டது, கொக்கரக்கோ கோ என்று சேவல் ஓங்கிக் கூச்சலிட்டது.

நான்கு விலங்குகளும் திடீரென ஜன்னல் வழியாக கத்திக்கொண்டே அறைக்குள் பாய்ந்தன. கொள்ளையர்கள், திடீரென்ற இந்தத் தாக்குதலால் நிலைகுலைந்துபோய் என்னவோ ஏதோ என்று பயந்து மேலே குதித்து, அந்த வீட்டை விட்டு வெளியே ஓடினார்கள்.

திருடர்களை ஓடவிட்ட உற்சாகத்தில், கழுதையும் அவரது நண்பர்களும் மேஜையில் அமர்ந்தனர்; அவர்களுக்கு இருந்த பசிக்கு நன்றாக வேண்டியமட்டும் சாப்பிட்டார்கள். சாப்பிட்டுச் சாப்பிட்டு விரைவில் அவர்கள் சோர்வடைந்தார்கள். கழுதை, சாப்பிட்ட அசதியில் முற்றத்தில் வைக்கோலில் படுத்துத் தூங்கச் சென்றது. நாய் வாசல் கதவின் முன் பரப்பப்பட்ட பாயில் தூங்கச் சென்றது. "நான் அடுப்படியில் கதகதப்பாகத் தூங்குவேன்" என்று பூனை சொல்லிச் சென்றது. சேவல், "நான் கூரையின் மேல் பறந்து அங்கேயே தூங்குவேன்" என்று போய்விட்டது. நண்பர்கள் எல்லோரும் நிம்மதியாக தூங்கச் சென்றார்கள். கழுதை விளக்கை அணைத்தது. நான்கு நண்பர்களும் குட் நைட் சொன்னார்கள். விரைவில், அவர்கள் தூங்கிவிட்டார்கள்.

இரவு நீண்டுகொண்டிருந்தது. கொள்ளையர்கள் இருண்ட வீட்டைப் பார்த்தார்கள். தலைவன் கூறினான், "நாம் ரொம்பத்தான் பயந்துவிட்டோம், நீங்கள் இங்கேயே இருங்கள், நான் வீட்டைப் போய்ப் பார்த்துவிட்டு வருகிறேன்" என்றான்.

கொள்ளையன் சமையலறைக்குள் சென்றான். பூனை அடுப்படியில் சுருண்டு கிடந்தது. கொள்ளையன் வெளிச்சத்திற்காக ஒரு தீக்குச்சியை பற்றவைத்தான். இது பூனைக்கு பயமாக இருந்தது, உடனே அது கொள்ளையன் மேல் கத்திக் கொண்டே பாய்ந்தது. கொள்ளையன் கதவை நோக்கி தலைதெறிக்க ஓடினான், நாய் கொள்ளையனை காலில் கடித்தது, கொள்ளையன் முற்றத்தின் வழியாக ஓடினான், கழுதை அவனை நன்றாக உதைத்தது.

சேவல் சத்தம் கேட்டு விழித்துக்கொண்டு, கொக்கரக்கோ கோ என்று தன் குரலெடுத்துக் கூவியது. "நாம் இனிமேல் அந்த வீட்டில் வாழ முடியாது, அங்கே பேய்கள் நடமாடுகின்றன நமது உயிருக்கே ஆபத்து வந்துவிடும்" என்று கொள்ளையன் பயந்தடித்து ஓடிவிட்டான். பிற கொள்ளையர்களிடம் நடந்த விஷயத்தைச் சொன்னான். அவர்கள் அந்த இடத்தைவிட்டு வெகுதூரம் சென்றார்கள்.

நமது நான்கு நண்பர்களுக்கும் அந்த வீடு மிகவும் பிடித்துப் போய்விட்டது. அவர்கள் அங்கேயே தங்கியிருந்தார்கள். அவர்கள் அதற்குப் பின்னர் ஒருபோதும் ப்ரெமன் நகருக்குச் செல்லவில்லை. ●



அரசுப் பள்ளிகளை மேம்படுத்துவதே என் லட்சியம்
– நடிகை பிரணிதா

மாரி

தமிழில் சகுனி, மாஸ் என்கிற மாசிலாமணி உள்ளிட்ட படங்களில் நடித்த நடிகை பிரணிதா பெங்களூரைச் சேர்ந்தவர். கன்னட திரையுலகில் அறிமுகமான இவர், தமிழ், தெலுங்கு மற்றும் இந்தி படங்கள் என பன்மொழி நடிகையாக பிரபலமாகி வருகிறார். தற்போது கன்னடத்தில் ராமண அவதாரா, இந்தியில் புஜ்: தி பிரைட் ஆஃப் இந்தியா மற்றும் ஹங்காமா 2 ஆகிய படங்கள் வெளியீட்டுக்கு காத்திருக்கின்றன. கொரோனா காலத்தில் இவரது தொண்டு நிறுவனமான பிரணிதா பவுண்டேஷன் ஆற்றிய களப்பணிகள் பாராட்டுக்கு உரியது. நடிப்பைத் தாண்டி தொண்டு நிறுவனம் தொடங்கி மக்களுக்கு சேவை ஆற்றும் இந்த எண்ணம் எப்படி வந்தது என்பதை பிரணிதாவிடமே கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்...

● 2021 பற்றி என்ன எதிர்பார்ப்பு உங்களுக்கு?

எல்லாருக்கும் புத்தாண்டு வாழ்த்துகள். 2020 எல்லாருக்கும் ரொம்ப சவாலாக அமைந்த ஒரு ஆண்டாகவே பார்க்கப்படுகிறது. நாடு முழுவதும் போடப்பட்ட ஊரடங்கு பலரது வாழ்வாதாரத்தை பாதித்தது. 2021ம் ஆண்டில் மக்கள் மகிழ்ச்சியாக இருந்தாலே நான் ரொம்ப சந்தோஷப்படுவேன்.

● நீங்கள் தொடங்கிய அறக்கட்டளை பற்றி சொல்லுங்க!

சாதாரணமான வேலை செஞ்சாலும் எங்க அப்பா சின்ன வயசுல இருந்தே யாருக்காவது உதவணும்னு இருப்பாங்க, அம்மாவுக்கும் அதே குணம் தான். அவங்கள பார்த்து வளர்ந்ததால, எனக்கும் உதவி செய்யும் மனப்பான்மை சின்ன வயசுலயே எனக்கும் வந்துடுச்சுன்னு நினைக்கிறேன். சினிமாவுல சம்பாதிக்கும் பணத்தை கொண்டு ஏதாவது மக்களுக்கு உதவணும்னு தான் இந்த பவுண்டேஷன் ஆரம்பிச்சிருக்கேன்.

● ஊரடங்கு சமயத்தில் நீங்கள் செய்த உதவிகளை வைத்து உங்களுக்கு அன்னபூரணி என பெயர் சூட்டினார்களே...

நிச்சயமா அதெல்லாம் பெரிய வார்த்தை. கொரோனா வைரஸ் உலகத்துக்கே பெரிய நெருக்கடியாக மாறிடுச்சு, இதுல இருந்து சாதாரண மக்கள் மீண்டு வர இன்னமும் போராடிட்டு இருக்காங்க, சட்டென அரசு முழு லாக்டவுன் அறிவிச்சவுடன் அன்றாட கூலிகள், ஏழை மக்கள் உணவின்றி தவிப்பாங்களேன்னு யோசிச்சேன். வாழ்க்கையே அழிஞ்சு போயிருந்தாலும் முதல்ல ஒருத்தருக்கு பசிக்கு சாப்பாடு கொடுத்திரணும். எவ்ளோ கஷ்டத்தையும் தாங்கி கடந்து போறதுக்கான தெம்பை அது கொடுக்கும்னு தோணுச்சு. அதனால தான் என்னால முடிஞ்சத என் குழுவினரை வச்சு செஞ்சேன்.

● 21 நாட்களில் 75 ஆயிரம் உணவுப் பொட்டலங்கள் எப்படி சாத்தியமானது?

அந்த முதல் மாதம் முழு

ஊரடங்கு போடப்பட்ட நிலையில், ஏகப்பட்ட பேர் என்ன செய்வதென்று தெரியாமல் தவித்தனர். பல நடிகர்கள், நடிகைகள் தங்களால் முயன்ற நிதி உதவிகள், உதவிகளை தாராளமாக செய்தனர். நானும் என்னுடைய அறக்கட்டளை சார்பாக மக்களுக்கு உணவு வழங்க ஏற்பாடு செஞ்சேன் ஆரம்பத்தில் ஆயிரம் உணவுப் பொட்டலங்களில் தொடங்கி 21 நாட்களில் 75 ஆயிரம் உணவுப் பொட்டலங்கள் ஆனது. அதற்கு அடுத்தும் தொடர்ந்து உணவுகளை அறக்கட்டளை சார்பாக வழங்கினோம்.

● நீங்களே சமைத்துக் கொடுத்த அனுபவம் எப்படி இருந்தது?

மனசுக்கு நிறைவான அனுபவம் அது. காசு கொடுத்து மத்தவங்கள செய்யச் சொன்னா, தானம் பண்றோம்னு இஷ்டத்துக்கு செஞ்சு கொடுத்திடக் கூடாதுன்னு நினைச்சேன். அதைவிட, ஊரடங்கு நேரத்தில் ஷூட்டிங் ஏதும் இல்லை. வீட்டில் சும்மா பொழுதை கழிக்காமல் நாமளே சமைச்சு கொடுத்தா நல்லா இருக்கும்னு தோணுச்சு, அதனால், சமைத்து, உணவுகளை பேக் பண்ணி வழங்கினேன். அதை கஷ்டப்படுற மக்கள் மத்தியில் சேர்த்த என் குழுவினருக்கு இந்த நேரத்தில் பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

● கல்வி சேவையில் உங்கள் பங்கு என்ன?

கல்வி தான் அடுத்த தலைமுறையை செதுக்கும் ஒரு நல்ல கருவி என நினைக்கிறேன். அதற்காக, அரசு பள்ளிகளுடன் இணைந்து, சில அரசு பள்ளிகளை தத்தெடுத்து அதனை முற்றிலும் தனியார் பள்ளிகளுக்கு இணையாக மாற்றும் முயற்சிகளையும் மாணவர்களுக்கு நல்லதொரு கல்வி மற்றும் அவர்கள் வாழ்க்கையில் முன்னேற்றம் அடைய வழிகாட்டுதலையும் பிரணிதா பவுண்டேஷன் மூலமாக செய்து வருகிறோம். கர்நாடகாவில் உள்ள ஹாசன் எனும் இடத்தில் உள்ள அரசு பள்ளி மற்றும் பெங்களூருவில் உள்ள அரசு பள்ளியையும் தத்தெடுத்து இதுவரை பணியாற்றி வருகிறோம்.

நடிகர்கள் சமூக சேவை செய்தாலே அரசியலுக்கு வந்துவிடுவார்கள் என்று பொதுவா ஒரு கருத்து இருக்கே...

தொண்டு நிறுவனத்தை தொடங்கி சேவை ஆற்றுவது அரசியலுக்கு செல்ல வேண்டும் என்பதற்காக அல்ல, சமூகம் நமக்கு ஒரு நல்ல வாய்ப்பையும் நல்ல வாழ்க்கையும் கொடுத்துள்ளது. பதிலுக்கு நம்மால் முடிந்த ஒரு சிறு உதவியை சமூகத்திற்கு எந்த அளவுக்கு திருப்பி கொடுக்க முடியும் என்கிற முயற்சியில் மட்டுமே இறங்கியுள்ளேன். மற்றபடி அரசியல் ஆர்வம் இல்லை.

● ஹார்வர்ட் பட்டம் பெற்றதை பற்றி கொஞ்சம் சொல்லுங்க?

எங்க அம்மாவுக்கு எப்படியாவது நான் டிகிரியாவது முடிக்கனும்னு ரொம்ப நாளாவே ஆசை இருந்தது. இந்த லாக்டவுனில் உலகப் புகழ்பெற்ற ஹார்வர்ட் பல்கலைக் கழகத்தின் ஹாவர்ட் கென்னடி பள்ளியில் படிக்கும் வாய்ப்பு கிடைத்தது. 122 நாடுகளை சேர்ந்த மாணவர்கள் ஆன்லைன் வகுப்பு மூலமாக பயின்றோம். தொழில் துறையில் ஆர்வமுள்ளதால் நிர்வாகக் கல்வி படிக்க வேண்டும் என்று விரும்பி படித்தேன். அதற்கான பட்டம் வந்த உடனே என் அம்மா மிகவும் சந்தோஷப்பட்டாங்க..

● எதிர்கால திட்டம் என்ன?

அனைத்து மொழிகளிலும் பட வாய்ப்புகள் போதுமான அளவுக்கு வருகின்றன. நல்ல கதைகளை தேர்வு செய்து எனது ரசிகர்களுக்காக செய்து வருகிறேன். ஒரு பக்கம் தொழில்துறை மற்றொரு பக்கம் தொண்டு நிறுவனம் என என்னால் முடிந்த விஷயங்களை செய்து வருகிறேன். மேலும், பெரிய அளவில் பிறருக்கு உதவி செய்ய வேண்டும் என்பதுவும் அனைத்து அரசு பள்ளிகளையும் மேம்படுத்த வேண்டும் என்பதுவும் எனது நோக்கம். நல்லதே நடக்கும் என்று நம்புகிறேன். ●

Date of publication: 1st week of every month. Regd. No. TN/CCN/477/2018-2020 & WPP No. TN/PMG (CCR) WPP-400/2018-2020.
Registrar of Newspaper for India NO. 11807/66 Posted at Egmore R.M.S - Pathirikai Channel. 2.2.2021

புதிர்கள்



1. ஹைலைட் செய்து காட்டப்பட்டிருக்கும் இரண்டு கட்டங்களிலும் என்ன வடிவங்கள் வரும்?
(விடை 2ம் பார்க்க)



2. இந்த புதிர் பாதையின் உச்சியில் உள்ள சிவப்பு நிற அறுகோணத்திலிருந்து அடியில் இருக்கும் பச்சை நிறு அறுகோணத்திற்கு செல்ல வேண்டும். ஆனால், இதற்கு ஒரு விதிமுறை இருக்கிறது. நீலத்திலிருந்து பச்சைக்கும், பச்சையிலிருந்து சிவப்பிற்கும் சிவப்பிலிருந்து நீலத்திற்கும் நகர மட்டுமே உங்களுக்கு அனுமதி.

(விடை 2ம் பார்க்க)

If undelivered kindly return to:
ARUMBU, Bosco illam, 26/17 Ranganathan Avenue, Sylvan Lodge Colony, Kellys, Chennai - 600 010.